[illegible]
V 57 No 1
Jan 1932

R673 m211 N128
N32.57.
182162

Registered No. M. 2330. Vol. 5—No. 1.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| மலர் ௫ | பிரசோற்பத்தி ஆண்டு தைத் திங்கள்<br>1932 ௵ ஜனவரி௴ | இதழ் ௧ |
|---|---|---|


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் ... | ௧ |
| சிவஞானபோத விளக்கம் ... ... ... | ௫ |
| முருகனே கலியுக தெய்வம் ... ... | ௧௧ |
| சம்பந்தரும் சோதிடமும் ... ... ... | ௧௬ |
| சமாஜ இருபத்தாறும் ஆண்டு விழா ... ... | ௧௯ |
| திருமறை-திருநாவுக்கரசு அவர்களின் சொற்பொழிவு ... | ௨௫ |
| மதுரையில் சைவப் பிரசங்கங்கள் ... ... | ௨௭ |
| 26-ம் ஆண்டு அறிக்கைப் பத்திரம் ... ... | ௨௯ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.
தனிப் பிரதி அணா 4.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
## இருபத்தேழாம் ஆண்டு உத்தியோகஸ்தர்கள்

[குறிப்பு:—கீழ்வரும் பெயர்கள் ஒவ்வொன்றின் முன் சைவத்திருவாளர் என்றும் இறுதியில் அவர்கள் என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**

ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ. எல். டி. எம். இ. எஸ்., தலைமையாசிரியர், போதனாமுறைப் பகுதி, அரசாங்கக் கல்லூரி, சித்தூர்.

**உதவித் தலைவர்கள்**

அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., சொந்தக்காரர், [illegible] கம்பெனி, 5, தெற்கு மாதாகோவில் தெரு, இராயபுரம், சென்னை.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ., மாஜிஸ்திரேட், [illegible], திருநெல்வேலி.

**பொதுக் காரியதரிசி**

ம. பாலசுப்ரமண்ய முதலியார், பி. ஏ. பி. எல்., அட்வகேட், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

**வரவேற்புக் காரியதரிசி**

பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், மகிபாலன்பட்டி, இராமநாதபுரம் ஜில்லா.

**உதவிக் காரியதரிசி**

எஸ். ஆறுமுக முதலியார், பி. ஏ., எல்.டி., தமிழ்ப்பேராசிரியர், இராஜதானிக் கல்லூரி, சென்னை.

**பொருட்காப்பாளர்**

தி. க. சுந்தரம் பிள்ளை, 88, திருப்பள்ளித் தெரு, ஜி. டி. சென்னை.

**பத்திராசிரியர்**

ம. பாலசுப்ரமண்ய முதலியார் (காரியதரிசியின் விலாசம்)

**உதவிப் பத்திராசிரியர்**

திரு. வி. உலகநாத முதலியார், உரிமையாளர், சாது அச்சுக்கூடம், 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

**ஏனைய நிர்வாக சபை அங்கத்தினர்கள், சென்னை**

1. க. இரத்தின முதலியார், 120, [illegible] ரோட், வேப்பேரி, P. O.
2. பரலி - சு. நெல்லையப்பர், ஆசிரியர் "லோகோபகாரி" [illegible]
3. பி. தியாகராஜ பிள்ளை, பி. ஏ., எல். டி., [illegible] வேங்கடாசல முதலி தெரு, திருவல்லிக்கேணி.
4. [illegible] - தணிகைவேல் முதலியார், 22, [illegible] தெரு, ஜி. டி.
5. சே. [illegible] பிள்ளை, [illegible] விலாசம், அப்புமுதலி தெரு, மயிலாப்பூர்.
6. K. T. [illegible], பி. ஏ., எல். டி., 412, [illegible] ரோட், திருவல்லிக்கேணி.
7. [illegible] - கோ. கண்ணுசாமிப் பிள்ளை, பி. ஏ., 259, லிங்கிசெட்டித் தெரு, ஜி. டி.
8. S. M. வேங்கடாசல முதலியார், 28, கிராமணிப் பிள்ளைத் தெரு, பெரம்பூர்.
9. தி. [illegible] பிள்ளை, பி. ஏ., பி. எல்., அட்வகேட், கச்சேரி வீதி, மயிலாப்பூர்.
10. C. S. சுவாமிநாத முதலியார், பி. ஏ., "[illegible] விலாசம்" [illegible] ரோட், [illegible] P. O.
11. ச. [illegible] முதலியார், [illegible] வியாபாரம், பசார் ரோட், இராயப்பேட்டை.
12. பா. [illegible], பி. ஏ., பி. எல்., அட்வகேட், 6/7, தாதாமுத்தியப்பன் தெரு, சென்னை.

**மாதக் கணக்குப் பரிசோதகர்**

தி. குப்புச்சாமி முதலியார், திருக்குறள் விளக்க ஆசிரியர், 8/2, பிள்ளையார் கோயில் தெரு, [illegible]பேட்டை, திருவல்லிக்கேணி P. O.

**ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்**

E. N. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வகேட், 411 [illegible] திருவல்லிக்கேணி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "


| | | |
|---|---|---|
| மலர் ரு | பிரசோற்பத்தி ஆண்டு தைத் திங்கள்<br>1932 ஆம் ஜனவரி மீ | இதழ் க |


## ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்

[பத்திராசிரியர்]

சீரும் சிறப்பும் வாய்ந்த நம் தமிழ்நாட்டில் சைவ நன்மக்களால் போற்றப்படும் பொருள்களுள் ஒன்று சூரிய வழிபாடு. சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு நாடோறும் அநுட்டானம் செய்பவர்கள் முடிவில் சூரிய நமஸ்காரம் செய்வார்கள். சாதாரண மக்கள் தை மாதத்திலே முதல் நாளிலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் (இன்றேல் தலை ஞாயிற்றுக்கிழமையிலும்) சூரியனுக்குப் பொங்கலிட்டுப் பூசைசெய்வது நமது நாட்டில் பல நூற்றாண்டுகளாக நடந்து வருகிறது. ஆனால் பொங்கலிடுவோரும் அநுட்டானம் செய்வோரும் சூரியனுடைய நிலை, தன்மை, சக்தி, உதவி முதலியவற்றைப்பற்றி ஏதொன்றும் தெரிந்து கொள்வதில்லை; தெரிந்துகொள்ள விரும்புவதுமில்லை. எனவே, சூரியனைப்பற்றிய சில வானநூற் பொருள்களை இங்கு விரிப்பது மிகையாகாது. சென்ற ஆண்டிலே, நமது பத்திரிகையில் " தை பிறந்தால் வழி பிறக்கும் " என்ற கட்டுரையில் சில விஷயங்களைக் குறித்தோம். ஈண்டு, அக்கட்டுரையிற் கூறப்படாத வேறு சில விஷயங்களைக் குறிக்க விரும்புகிறோம்.

ஆகாயத்தில் காணப்படும் கோடிக்கணக்கான நக்ஷத்திரங்களைப் போலவே சூரியனும் ஒரு நக்ஷத்திரந்தான் என்று மேல்நாட்டு வானசாஸ்திரிகள் கூறுகின்றனர். நமது பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம் ஒன்பது கோடியே முப்பது லக்ஷம் மைல் ஆகின்றது. ஆனால் சூரியனைத் தவிர

ஏனைய நக்ஷத்திரங்களுள் நமது பூமிக்கு மிகவும் அருகாமையிலுள்ள நக்ஷத்திரம், சூரியனைவிட இரண்டு லக்ஷம் மடங்கு அதிகமான தூரத்திலுள்ளது. ஆகையால் சூரியனே நமது பூமிக்கு மிகவும் நெருக்கத்திலிருப்பவனாகின்றான். அதனாலேதான் சூரியன் அதிக ஒளியோடும் வெப்பத்தோடும் நமக்குத் தோன்றுகிறான். ஒளியானது ஒரு செகண்டுக்கு லக்ஷத்து எண்பதினாயிரம் மைல் வேகத்தோடு செல்லும் தன்மையுடையது. சூரிய ஒளியானது பூமிக்கு வருவதற்கு எட்டு நிமிஷங்களாகின்றன. சிற்சில நக்ஷத்திரங்களிலிருந்து நமது பூமிக்கு ஒளி பிரயாணம் செய்வதற்குக் கோடி வருஷங்கூடச் செல்கிறதென்றால் அவைகள் பூமிக்கு எவ்வளவு தூரத்திலிருக்கின்றனவென்றும் இவ்வண்ட சராசரத்தின் அளவு எத்தகையது என்றும் ஒருவாறு புலனாகும்.

உலகத்திலுள்ள வேகத்தைக்கொண்டு சூரியனுக்கும் நமக்கும் உள்ள இடைவெளியை ஒருவாறு அளந்து கூறலாம். அதாவது ஒரு மணிக்கு இருநூறு மைல் வேகத்தோடு செல்லும் ஓர் ஆகாயவிமானம் (aeroplane) இங்கிருந்து சூரியனையடைய ஐம்பது வருஷங்களாகும் என்று ஒருவாறு கூறலாம். ஆனால் ஆகாயவிமானம் பூமிக்கு மேலே, உயரத்தில் ஐம்பது மைலுக்குமேல் காற்றில்லாமையால் செல்ல முடியாது. ஏனெனில் பெட்ரோல் எண்ணெயும் வேலை செய்யாது; ஓட்டுபவனும் மூச்சுவிட முடியாது.

சூரியன் என்ற கோளம் உருண்டை வடிவாகவுள்ளது. அவ்வுருண்டையின் குறுக்களவு (diameter) 886,000 மைல். இவ்வுருண்டை மிக்க ஒளியுடையதாகவும் மஞ்சள் நிறமுடையதாகவும் இருக்கிறது. இதற்கு **ஒளி கோளம்** (photosphere) என்று பெயர். இதற்கு மேலே எல்லாப்புறங்களிலும் தேங்காய் ஓடுபோல் பதினாயிரம் மைல் கனமுடைய ஒரு போர்வை உள்ளது. அது சிவப்பு நிறமுடையது. அதற்கு **செங்கோளம்** (Chromosphere) என்று பெயர். இப்போர்வையின் வெளிப்புறத்தில் பல இடங்களில் நெருப்பலைகள் ஏறக்குறைய ஒரு செகண்டுக்கு 500 மைல் வேகத்தோடு ஐந்து லக்ஷம் மைல்வரை துள்ளியெழுகின்றன. இவைகளுக்கு (prominences) என்று பெயர். இவைகளுக்கெல்லாம் புறம்பே சூரியனுருவத்தைச் சுற்றி மெல்லிய பச்சை யொளியானது எல்லாப் பக்கங்களிலும் 10 லக்ஷம் மைல் முதல் 90 லக்ஷம் மைல் அளவுவரை சுற்றிக்கொண்டிருக்கிறது. இதை (corona) என்று வானசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

சூரியனுடைய ஒளி கோளமானது (photosphere) கால்சியம், சோடியம், மக்னீஷியம், பொடாசியம், அலுமினீயம், வெள்ளி, வெள்ளைச்செம்பு, செம்பு, துத்திநாகம், நாகம், வெள்ளீயம், ஜலவாயு, பிராணவாயு, கரிவாயு முதலிய பொருள்கள் வாயுரூபமாக விருந்து ஒளியும் அனலும் வீசுவதினால் யாக்கப்பட்டுள்ளது. இப்பொருள்களெல்லாம் சூரியனுடைய கோளத்திலும் ஏனைய நக்ஷத்திரங்களுடைய கோளங்களிலும் உள்ளனவென்பதை (spectroscope) என்ற கருவியினுதவியால் அறியக்கூடும். இக்கோளத்தில் சில கறுப்புப் புள்ளிகள் (Sun-spots) காணப்படுகின்றன. இவைகள் சூரிய



கோளத்திலுள்ள பலவகையான வாயுக்களினிடையே நிகழும் பெரும்புயல்கள் (Solar tornadoes) என்று வானசாஸ்திரிகள் ஊகிக்கின்றனர். இந்தப் புள்ளிகள் நமது கண்ணுக்குப் புலனாகும் சூரியனது வட்டபிம்பத்தில் (Sun's disc) ஒரு புறத்தில் மறைந்து பிறகு இருபத்தைந்து நாள் கழிந்தவுடன் எதிர்ப்புறத்தில் தோன்றுகின்றன. இதை ஆராய்ந்து கலிலியோ (Galileo) என்ற வானசாஸ்திரி சூரியன் தன்னைத்தானே இருபத்தைந்து நாளுக்கொருமுறை சுற்றி வருவதாகக் கண்டுபிடித்தார். சூரியனிடத்திலுள்ள மேற்கூறிய கறுப்புப் புள்ளிகள் பதினொரு ஆண்டுகட்கொருமுறை மிக அதிகமாகக் காணப்படும். அப்போது நெருப்பலைகளும் (prominences) மிகுதியாகக் காணப்படும். 1915ஆம் வருஷத்திலும் 1926லும் இப்புள்ளிகளின் மிகுதி காணப்பட்டது. அடுத்த 1937ஆம் வருஷத்திலும் இம்மிகுதி காணப்படும். இம் மிகுதி ( Sun-spot activity) காணப்படும் காலத்தில் நமது பூவுலகத்திலும் மின்சாரப் புயல்கள் (magnetic storms) அதிகமாக ஏற்படுவது வழக்கம்.

நீல நிறமுடைய நக்ஷத்திரங்கள் நல்ல பிராயத்திலுள்ளவைகள் என்றும் மஞ்சள் நிறமுடையன கிழத்தன்மையடைந்தனவென்றும் கொள்வது வான நூற்றுணிபு. எனவே, நமது சூரியன் மஞ்சள் நிறமுடையவனாயிருத்தலால் நாளுக்குநாள் ஒளிகுன்றி கிழத்தன்மையடைந்துள்ளான் என்பது பெற்றாம். ஸர் ஜே. எச். ஜீன்ஸ் (Sir J. H. Jeans) என்ற கணித சாஸ்திர நிபுணர் நமது சூரியனுடைய தற்போதைய வயது எட்டு லக்ஷம் கோடி ஆண்டுகளென்றும், சூரியனது கோளத்திலுள்ள பொருள்கள் ஒரு செகண்டுக்கு 4 டன் வீதம் நாசமாகின்றனவென்றும் (Sun loses mass at 4 tons per second), 15000 கோடி வருஷத்தில் சூரியன் தனது கோளத்தில் நூற்றில் ஒரு பங்கை இழக்கவேண்டுமென்றும்; அஃதேபோல் கணக்கிட்டால் இன்னம் பதினைந்து லக்ஷம்கோடி வருஷத்தில் சூரியன் தனது ஒளி முழுமையும் இழந்து இருட்டுருண்டை (Dark body) யாகப் போய்விடு மென்றும் கூறுகிறார். ஆனால் வேறொரு பெரிய நக்ஷத்திரம் சூரியனை நோக்கி ஒரு செகண்டுக்குப் பதினைந்து மைல் வேகத்தோடு வந்துகொண்டிருப்பதால் கடைசியாக எவ்வித மாறுதல்கள் ஏற்படுமென்று திட்டமாகக் கூறமுடியாதென்றும் புலப்படுகின்றது.

சூரியன் தனது சக்தியால் தன்னைச் சுற்றிவரும்படி சில கோளங்களை ஓட்டுகிறான். அவை புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் என்பன. இவைகளைத் தவிர செவ்வாய்க்கும் வியாழனுக்கு மிடையே சிறு கோட்கூட்டம் (Planetoids) என்று ஒன்றுண்டு. பூமிக்கு ஒரு சந்திரனும் செவ்வாய்க்கு இரண்டு சந்திரரும், வியாழனுக்கு ஒன்பது சந்திரர்களும், சனிக்குப் பத்தும் உள்ளன. இவைகளெல்லாவற்றிற்கும் கோள்களும் சந்திரரும் (Planets and their satellites) என்ற பொதுப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைத்தவிர வால் நக்ஷத்திரங்கள் (Comets) சிலவுண்டு. 1910-ம் வருஷம் தோன்றிய வால் நக்ஷத்திரத்

துக்கு ஹாலீஸ்காமெட் (Halley's Comet) என்று பெயர். அது 75 ஆண்டு கட்கொரு முறை சூரியனைச் சுற்றிவருகிறது. அஃதேபோல் வேறு பல வால் நக்ஷத்திரங்களுமுண்டு. விழுமீன்கள் (meteors) என்பனவும் வருடத்துக் கிருமுறை நாம் காணக்கூடியவைகளே. சூரியன், கோள்கள், சிறு கோட்கூட்டம், வரல் நக்ஷத்திரங்கள், விழுமீன்கள் என்பவைகள் எல்லாம் சேர்ந்த கூட்டத்துக்கே சூரியமண்டலம் (Solar system) என்று பெயர்.

சூரியனது ஒளியும் வெப்பமுமே இப்பூவுலகத்தில் உயிர்கள் தோன்றி நின்றழியும் வாழ்க்கைக்குக் காரணமாயுள்ளன. எனவே, பூலோகத்துக்கு உயிர்கட்கு உயிராயிருப்பவன் சூரியனே. இதனாற்றான் சூரியனைக் கடவுளாக வைத்து வழிபடும் முறை இவ்வுலகத்தில் எல்லா மக்களிடத்திலும் ஆதியில் ஏற்பட்டது. சைவர்கள் சூரியனைச் சிவபெருமானது அட்டமூர்த்தங்களுள் ஒன்றாகவும் முக்கண்களுள் ஒன்றாகவும் வைத்து வழிபடுகின்றனர். சிறப்பாகத் தமிழ் மக்கள் சூரியனைத் தலைமையிலிருத்தித் தங்கள் விரத விழாக்களையெல்லாம் சௌரமான முறைப்படி நடத்தும் வழக்கத்தை மேற்கொண்டார்கள். சங்கப் புலவர்மணியாகிய நக்கீரரும் "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" என்று சூரியனை வருணித்திருக்கிறார்.

ஆகாயத்தில் சூரியன் செல்லும்பாதைக்கு (Ecliptic) என்று பெயர். இதில் அசுவனி முதல் ரேவதி ஈறாகவுள்ள 27 நக்ஷத்திரங்களும் உள்ளன. இப்பாதையைப் பன்னிரண்டு கூறாக்கி, மேஷம், ரிஷபம் முதலிய பன்னிரண்டு ராசிகளாகவும் கூறுவது வழக்கம். சூரியன் ஒவ்வொரு ராசியிலுமிருக்கும் காலவளவைக்கு ஒரு சௌரமாதம் என்று பெயர். ஒரு ராசியில் சூரியன் பிரவேசிக்கும் தருணத்துக்கும் சங்க்ராந்தி யென்றுபெயர். மேஷ ராசியிற் பிரவேசிக்கும் தருணத்துக்கு மேஷ சங்க்ராந்தி யென்று பெயர். அஃதேபோல் மகராசியில் பிரவேசிக்கும் தருணத்துக்கு மகரசங்க்ராந்தி யென்று பெயர். இதைத்தான் பொதுவாக நாம் சங்க்ராந்திப் புண்ணிய காலம், பொங்கல் திருநாள் என்று கொண்டாடுகிறோம். மகரசங்க்ராந்தி என்ற சொல்லுக்கு தைமாதத் தொடக்கம் என்பதுதான் பொருள்.

எனவே, இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் தைமாதப் பிறப்பாகிய மகரசங்க்ராந்தி யென்ற பொங்கல் விழாவை வழக்கம்போல் பொங்கலிட்டுப் புதுத் துணியுடுத்திக் கொண்டாடுவதோடமையாது, சூரியனைப்பற்றி வான நூற்புலவர்கள் கூறுகின்றவிஷயங்களைத் தாங்களும் தெரிந்துகொண்டு பிறருக்கும் தெரிவித்து அறிவுத்தொண்டு புரிந்தால் மேல் நாட்டினர் கண்களில் நமது நாட்டுக்கும் உயர்வு ஏற்படுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். சாதாரணமாகக் "குருட்டுப் பழக்கம்" என்று ஆராய்ச்சிப் புலிகள் எள்ளி நகையாடுகின்ற முறையில் மட்டும் நின்று மகரசங்க்ராந்தி காலத்தில் சூரிய வழிபாடு செய்வதைவிட சூரியனது நிலை, தன்மை, வன்மை



முதலியவற்றை யுணர்ந்து அறிவுள்ள வழிபாடாக அவ்விழாவைக் கொண்டாடுவது எவ்வளவு சிறந்ததென்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

"தைபிறந்தால் வழி பிறக்கும்" என்ற முதுமொழிக்கிணங்க இம் மகரசங்க்ராந்தி மட்டும் அறிவுள்ள வழிபாடாக நின்றுவிடாமல் ஏனைய விழாக்கள் விரதங்களிலும் அறிவுள்ள வழிபாடு நிகழ்வதற்கு இது ஒரு வழிகாட்டியாகத் திகழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

# சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

## ஒன்பதாஞ் சூத்திரம்

மேற்சூத்திரத்துள் தம் முதலானது, குருவாயெழுந்தருளி உணர்த்திய உண்மையை அறிந்து, அம்முதலைச் சிந்தனைசெய்து உணரும் விதம் உணர்த்தும் முகத்தான், ஐம்புலவேடரின் வளர்ந்த குற்றத்தை நீக்கி, உயிர் தன்னைத் தூய்மைபடுத்தும் விதம் உணர்த்துவான் கருதி, ஆசிரியர் பின் வரும் ஒன்பதாஞ் சூத்திரத்தைக் கூறுகின்றனர்.

"ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே"

(இ - ள்) ஊனக்கண் - குறைந்த வுணர்வினையுடைய பசு அறிவினாலும், பாசம் - பாச அறிவினாலும், உணராப் பதியை - உணர்தற்காகாத முதல்வனை, ஞானக்கண்ணினில் - அவனது திருவடி ஞானமென்னும் அறிவினால், சிந்தை நாடி - தன் அறிவினிடத்தே ஆராய்ந்து அறிவாயாக, (அவ்விதம் ஆராய்வாயாயின், அத்திருவடி ஞானத்தால்) உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ - நிலம் முதல் நாதம் முடிவாகச் சொல்லப்பட்ட பாசக் கூட்டமானது நின்ற இடத்து நில்லாது பரந்து திரிதலிடத்து அதிவேகமுடைய பேய்த் தேர்போல் கழிவதென்று அறிந்து நீங்கவே, பதி - அப்பதி ஞானமானது, தண்ணிழலாம் - பிறவித் துன்பமாகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு நிற்கும். (அவ்வாறு பாசத்தைவிட்டு ஞானத்தைப்பெற்று ஞேயமென்னும் காட்சிப் பொருளைக் கண்ட காட்சியானது சலியாதிருக்கும் பொருட்டு அப்பொருளைப் பயக்கும்) விதியெண்ணும் அஞ்செழுத்தே - விதிப்படி திருவஞ்செழுத்தினை யறிந்து உச்சரிக்கப்படும் என்பதாம்.

இவ்விதம் கூறக்கேட்ட வாதி யொருவன், எட்டாஞ் சூத்திரத்தில் கூறியபடி, முதல்வன் பாச அறிவினால் ஆராய்வதற்கு உரியனல்லனாயி

னும்; பசு அறிவினால் அறிதற்கு ஆகாதோ? என்னலும், அம்முதல்வன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்பவனாதலால், அவனைப் பதிஞானத்தாலேயே காணக்கூடுதல் ஆகுமென்பார்,

"நாடியோ வென்போ நரம்புசீக் கோழையோ
தேடியெனை யறியேன் றேர்ந்தவகை—நாடியான்
றன்னாலே தன்னையுங்கண்டு தமைக் காணா
ரென்னா மென வறிவா ரின்று."

என்றருளினார். இதன் பொருளாவது, இடை பிங்கலை முதலியவற்றுள், யான் யார்? என்னைத் தேடியும் யான் அறிகின்றிலன் என்று இவ்விதம் ஆராய்கின்ற ஆராய்ச்சியறிவின்கண் இதனைத் தெளிவிப்பதாகிய ஓர் அறிவு வேறு உண்டென ஆராய்ந்து நோக்கி, அவ்வாறு நாடுமிடத்து விளங்கித்தோன்றுமிடத்து, முதல்வனது திருவடிஞானத்தால் முதல்வனை யறிந்து அவனிடத்து அடங்கி நின்று அவ்விதம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்தலைச் செய்யாதார், இம்முத்திக் காலத்து மற்று எவ்வியல்பினரொன்று தம்மை யறியவல்லுநராவர் என்பதாம்.

இதன் கருத்து தம்மை யறியும் விதம் உணர்த்தும் விதத்தில் தலைவனை யறிந்தபின் அறியப்படுவதாகிய தம் அறிவுகொண்டு தலைவனை யறியும் விதம் எவ்விதமாகும்? என மறுத்ததாகும்.

இதுகேட்ட வாதியானவன், தனக்கு எதிரே ஒரு பொருளைக்கண்ட கண்ணே, பின் புறத்துள்ள கண்ணையும் காணும் தன்மையதாகும். அதுபோல, மேற்சொல்லியபடி ஆராய்ந்து அறிதலைச்செய்த உயிரே தெளிந்து அறிதலையும் செய்யக்கூடும். ஏன் அரன் தன்னால் காணுதல் வேண்டும்? என்பார்க்குப் பதில் கூறுவார் போன்று,

"காட்டிய கண்ணே தனைக்காணா கண்ணுக்குக்
காட்டாய வுள்ளத்தைக் கண்காணா—காட்டிய
வுள்ளந்தனைக் காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்வன்றா னுள்ளத்திற் காண்"

என்று அருளிச் செய்தார். இதன் பொருளாவது, கண் ஒன்று ஒரு விடயத்தைக் காண்கின்ற காலத்து உள்ளிருக்கும் உயிரால் காட்டப்பட்டுக் காணுமாயினும், கண்ணே தன்னியல்பு இதுவென்று தன்னை யறியாது. அல்லாமலும், அவ்விடயத்தைத் தனக்குக் காண்பித்து முதலாய் நிற்கும் உயிரையும் அக்கண் காணமாட்டாது. அதுபோல, மறைந்து நின்று உணர்த்தும் முதல்வனால், உணர்த்தப்பட்டு ஒன்றனை இதுவென்று ஆராய்ந்து அறிகின்ற உயிரானது, ஆராய்ந்து அறிந்ததன் இயல்பை யறியமாட்டாது. தன்னையுள் நின்று உணர்த்தி நிற்கும் முதல்வனை யறியமாட்டாது. அத்தேர்ச்சியறிவின் கண்ணும் உடனாய் நிற்கும் கள்வன் அம்முதல்வனேயாதலால், அம்முதல்வனை அவ்வறிவின்கண் வைத்து, நாடித் தெளிவாயாக என்பதாம்.

இதன் கருத்து, உள்ளத்தில் காணவல்லார்க்குத் தோன்றாது நிற்கும் அக்கள்ளம் தீர்தலால், தம்மையும் முதல்வனையும் காண்டல் கூடு



மென்பதாம். இதுபற்றியே, "கள்ளரோடு இல்லமுடையார் கலந்திடில் வெள்ள வெளியா மென்றாந் தீபற, வீடும் எளிதா மென்றாந் தீபற" என்னும் திருவாக்கும் எழுந்தது.

அதுகேட்ட வாதியானவன், அம்முதலை ஞானக் கண்ணால் காண்க என்று ஆசிரியர் கூறியது ஒக்கும். அஞ்ஞானக் கண்ணை எவ்வாறு பெறுவது? என்னலும், அசத்தாய் உள்ள பிரபஞ்சத்தை அசத்தென்று காண, பின்னர் உளதாய் நிற்பது, ஞான சொரூபமேயாம். அது எதுபோலெனின், படிகத்தில் தோன்றும் வண்ணபேதங்களை அப்படிகச் சொருபமல்ல! தோன்றும் வண்ண பேதம் என்று கண்டு கழித்தால் பின்பு நிற்கும் படிக சொரூபம்போல் என்னலும் அசத்தை அசத்து என்று கண்டு நீங்கிய இடத்து, காணப்படுவது சூனியமே யல்லாமல், பிறிதொன்று இல்லைபோலும் என்று வாதி கூறுதலும், ஞானசொரூபத்தின் இயற்கை இதுவென்று கூறி அதனை வலியுறுத்துவார்,

"நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வ—னற்புதம்போ
லானாவறிவா யளவிறந்து தோன்றாதே
வானே முதல் களையின் வந்து"

என்று அருளினார். இதன் பொருளாவது, அசத்துப் பிரபஞ்சம்போல, முக்குண ரூபமாய் அளவிட்டு அறியப்படுவானும் அல்லாதானாய் முக்குணங்களைக் கடந்த மிச்சரப் பிரபஞ்சம்போல மலகன்ம காரிய ரூபமாய் அறியப்படுவானுமல்லாதானாய், மல கன்மங்களையுங் கடந்த சுத்த பிரபஞ்சம் போல, அநித்தியானந்த ரூபனாய், அறியப்படுவானு மறியாதானாய், இம்மூன்றனோடும் கூடிப் பொது இயல்புபற்றி அவ்வாறு உணரப்படும் உயிர் போல் அன்றி, அதற்கு மேலாய் இவ்வாறு நிற்றலான், ஒன்றன் இயல்பு பற்றி யறியப்படாத தனிமுதலாகிய இறைவன் ஆகாசம் முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கிய வழி பயின்று அறிந்து வரும் தனது சுட்டறிவின் அளவினைக் கடத்தலால் இன்னதென்று அறியவாராத சூனியப் பொருள்போலத் தோன்றி, பின்னர்ச் சுட்டு இறந்து அறியும் தன் அறிவினிடத்து, நீங்காது நிலைபெறுவதாய் சோதிக்குள் சோதியாய் விளங்கித் தோன்றான் கொல்லோ! என்பதாம்.

அதுகேட்ட வாதியானவன், ஆகாசம் முதலிய அசத்துப் பொருள்களை அசத்தென்று கண்டு நீங்கிய இடத்து, அவ்விடத்துத் தோன்றுவதும் வேறொன்று எனக் கொள்ளும் ஞானசொரூபம் என்பதற்குப் பிரமாணமென்னை என்னலும், அதற்குப் பதில் கூறுவார்,

"சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னத்
சட்டவினி யுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்"

என்று அருளினார். இதன் பொருளாவது, ஏகதேச வுணர்வினால் சுட்டி

யுணரப்படுவதாகிய பிரபஞ்சத்தை மேற்கூறியவிதமே, ஒவ்வொன்ருகச் சுட்டிச்சுட்டி, அசத்து அசத்து என்று கண்டு, கழித்துக்கொண்டு சென்றவிடத்து, முடிவினிடத்தே செம்மைப் பொருளாகத் தோன்றுவது எதுவோ, அப்பொருளே கழித்த அவ்வசத்தின் வேருகிய சத்தாகும். இதனை நீ யறிந்துகொள்ளுவாய். அவ்விதமல்லாது அசத்தின் வேருகி அங்ஙனம் காணப்படும் சத்துப்பொருளே உயிரே யாகும் என்று கூறின் இதுகாறும், அசத்தோடு கூடிச் சுட்டியறிந்து வந்த நீ, அசத்தின் வேருகி அவ்விதம் காணப்படும் சத்துப்பொருள் ஆகமாட்டாய். அவ்விதமாயின், இச்சுட்டுணர்வு எனக்கு நீங்குவது இல்லையோ எனின், அசத்தின் வசப்பட்டு சுட்டியறிந்து வந்த நீ அவ்வசத்தினிடத்தினின்றும் நீங்கிச் செம்மைப் பொருளாகக் கண்ட சத்தின் வசப்பட்டு, அதனைச் சேருவாயாயின் அச்சேர்க்கையாலே சுட்டுணர்வு என்னும் அப்பொதுவியல்பு உன்னைவிட்டு நீங்கும் என்பதாம். அது கேட்ட வாதி, அசத்தை அசத்து என்று கண்டு ஒழியும் விதமும், ஒழிந்தவிடத்து உண்மையைத் தைவம் சேரும் விதமும், சேர்ந்தவிடத்து அதனுல் பொய்யைவிட்டு நீங்கும் விதமும் எவ்வாறு என்னலும், அவையெல்லாம் அறிவிக்க,

"கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
வூனத்தைத் தான்விடுமா றுத்தமனி னெண்கருட
சானத்திற் றீர்விடம்போற் றூன்"

என்று அருளினுர். இதன் பொருளாவது, சுட்டிபுணர்ந்த பிரபஞ்சத்தினை இது சத்து அல்லை; இது சத்து அல்லை என்று ஒவ்வொன்ருகக் கண்டு அசத்து என்று ஒழித்து, அவ்விதம் கண்டு ஒழிந்த தன் அறிவினிடத்தே சுட்டுணர்வு இல்லாது நின்ற கடவுளை யாராய்ந்து சோகம் என்று பாவிப்பானுயின் அப்பாவகத்தால் அத்துவிதமாகி விளங்கித் தோன்றும் முதல்வனுல் அநாதியாய்க் கூடிநின்ற பொது இயல்பினைத்தான் விட்டு நீங்கிய விதம், ஒள்ளியகருடதியானத்தில் விளங்கித் தோன்றும் கருடனுய் பாவனை செய்தவன், அப்பாவனையில் விளங்கும் கருடனுல் விடத்தைத் தீர்த்துக்கொள்வதுபோல என்பதாம். அது கேட்ட வாதியானவன், கருடத்தியானம் என்பது ஒன்றுண்டோ என்னலும், அதற்குக் கருடத்தியானம் என்பதொன்று உண்டென்றும், அது எவ்விதமெனில், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆதியான்மிகம் என்று கருடன் மூவகைப்படும் என்றும், அம்மூவகையுள் உலகத்தில் காணப்படும் கருடன் ஆதிபௌதிககருடன் என்றும், அதற்கு அதிதெய்வமாகிய மந்திரம் ஆதிதைவிக கருடனென்றும், அம்மந்திரம் இடமாக நின்று மாந்திரீகனுக்குப் பயன்கொடுப்பதாகிய சிவசத்தி ஆதியான்மிக கருடனென்றும் கூறப்படும். அம்மூவகையுள் இங்கு கருடனென்று கூறியது மாந்திரீகன் உள்ளத்தில் வைத்துத் தியானஞ் செய்து கணிக்கப்படும் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை என்றும், அதனைப் பாவித்தலாவது, தினந்தோறும் பழகிவந்த பழக்கத்தால் அம்மந்திர ரூபமே தானுகத் தான் வேறு, அது வேறு அல்ல என்று பாவனைசெய்து



என் அறிவானது அதன் வசமாம்படி தங்கிநிற்றல் என்றும், அவ்விதம் தங்கிநின்று அம்மந்திரங் கொண்டு பார்க்கவே, அப்பாவனை விஷவேகத்தை மாற்றும் என்றும் கூறியதாயிற்று என்பதாம்.

இவையெல்லாங் கேட்ட வாதியானவன், இவ்விதம் ஆன்மாவைச் சுத்தி பண்ணுவதற்குப் பாசம் நீங்கியவிடத்து, குளிர்ந்த நிழலாய்த் தோன்றிய ஞானசொருபம் ஒன்றே போதுமாதலின், இனி ஆன்மா செய்யக்கடவது ஒன்றில்லை யென்னலும், அதுபோதாது, பாசம் நீங்கி ஞானக்கண்ணினுல் பதிப்பொருளைச் சிந்தையால் நாடிய பிறகும், திருவஞ்செழுத்தை விதிப்படி கணித்தல் வேண்டும் என்றனர். விதிப்படி கணித்தலாவது, மாநதம், மந்தம், உரை என்னும் மூவிதத்துள், முத்திபஞ்சாக்கரத்தை (சிவாயநம) மானதமாக உச்சரித்தல். ஏன் உச்சரித்தல் வேண்டுமெனின், ஆன்மாக்கள் ஞானம் விளங்கினும், வேம்பினைத்தின்ற புழுவொன்று, அவ்வேம்பை விட்டுக் கிடைத்த கரும்பினிடத்தே சுவைகண்டும், நெடுங்காலம் வேம்பினிடத்துப் பழகிய பழக்கத்தால், அவ்வேம்பின் மீதுசெல்வதுபோல் என்னை விட்டகன்ற அஞ்ஞானத்தில் செல்லும் ஆதலால், அஞ்ஞான வாசனையை நீக்குதற்குச் சாதனமாகும் விதம் இதுவென்று கூறுவார்,

"அஞ்செழுத்தா லுள்ள மரனுடைமை கண்டரனை
யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தி—லஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கி
லண்டனுஞ் சேடனு மங்கு,"

என்று அருளினுர். இதன் பொருளாவது, உயிர் சிவனுக்கு உடைமையாதலின், அஞ்செழுத்தை யுச்சரிக்கும் முறையில் வைத்து நோக்கித் தன், உடம்பு அகத்தே இதயம், உந்தி, புருவம்நடு என்னும் மூன்றினையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாக எண்ணிக் கொண்டு புறம்பே ஞானபூசை செய்யும் முறைமைப்படி இதயம் என்னுந் தாமரையில் அவ்வைந்தெழுத்தால் அமைந்த திருமேனியினிடத்து, அம்முதல்வனைக் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறையுடைமை, அருளுடைமை, அறிவு, வாய்மை, தவம், அன்புடைமை என்னும் அட்ட புஷ்பம் கொண்டு, அம்மந்திரத்தால் அருச்சித்து, அத்திருமந்திரத்தாலேயே குண்டலித்தானமாகிய உந்தியினிடத்தே ஞான அழலை யெழுப்பி அதனிடத்தே விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யினைச் சுழுமுனைநாடி, இடைநாடி ஆகிய சுருக்கு சுருவங்களால் ஓமித்து விந்துத்தானமாகிய புருவநடுவில் சிகாரயகாரவகாரங்கள் மூன்றும் முறையே, தற்பதப்பொருளுந் துவம்பதப் பொருளும், அசிபதப் பொருளுமாம் முறைமையினை நோக்கி அதனுல் சிவோகம் பாவனை செய்வானுயின் அவ்விதஞ் செய்த பாவனையினிடத்தே அம்முதல்வன் விளங்கித் தோன்றுவன். பாவனை செய்த அவன் அவனுக்குச் சேடசேடிய பாவகத்தால் அடிமையாவன் என்பதாம்.

இவ்வாறு கூறிய ஆசிரியர், அவ்விதம் ஒரு குறியினிடத்தே வைத்து அல்லாமல் முதல்வனைக் காண்டல்கூடாது என்னும் விதத்தினை அவ்விதம் கண்ட இடத்து, முதல்வன் தன்னிடம் விளங்கித் தோன்றும் விதத்தையும்

தோன்றிய விடத்து, தான் அம்முதல்வனுக்கு அடிமையாம் விதத்தையும் உவமையில் வைத்து உணர்த்துவார்,

" இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணா—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சே ரிரும்பென்ன
வாட்டாணா மோதஞ் செழுத்து,"

என்றருளினார். இதன் பொருளாவது, ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற நவ கோள்களுள் மற்றைய கோள்கள் போல மக்கள் கண்களுக்குக் காணப் படாத இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில் சூரிய சந்திரர்களிடத்து கண்டாற்போல, முப்பொருள்களுள் யான் இதனை யறிந்தேன்; அறிகின்றிலேன் என்னும் உணர்வுக்கு விடயமாகிய பசு பாசங்களோடு ஒப்ப வேறு உணரப்படாத முதல்வனை தன் இதயத்தாமரையில் ஐந்தெழுத்தின்முறையில் வைத்துக்காணுமாயின், கோலை நட்டுக் கயிற்றினால் சுற்றிக் கடைந்தால் விறகினின்றும் தீ தோன்றுமாறுபோல, அம்முதல்வன் அவ்விடத்துத் தோன்றி அறிவுக்கு அறிவாய் விளங்கி நிற்பன். அப்பொழுது தானும் தீயைச் சேர்ந்த இரும்புபோல தனது சுதந்திரத்தை விட்டு அம்முதல்வனுக்கு அடிமையாகும். ஆதலால், அத்திருவஞ்செழுத்தை விதிப்படி யோதுவாயாக என்பதாம். இவ்விதம் உவமையில் வைத்துக்கூறியதைக் கேட்ட வாதிகள், தத்துவம் முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனை யிதயத் தாமரையில் கண்டு அருச்சித்தல் எவ்விதம் என்னலும், அதற்குப் பதில் கூறுவார் போன்று,

" மண்முத ளைமலர் வித்தை கலாரூப
மெண்ணிய வீசர் சதாசிவமு—நண்ணிற்
கலையுருவா நாதமாஞ் சத்தியதன் கண்ணா
நிலையதிலா மச்சிவன்றா ணேர்"

என்றருளினார். இதன் பொருளாவது, அவ்விதயத் தாமரையின் இயல்பினை யறியப்புகில், நிலம் முதலிய இருபத்து நான்கு தத்துவமும், உந்தியிடத்தே யிருந்து தோன்றி எட்டு விரல் அளவையுடையதாகிய நாளவடிவாகும், வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்த வித்தையும் ஆகிய எட்டு தத்துவமும் எட்டு இதழ் வடிவாகும். அத்தத்துவங்களுக்கு மேலாக எண்ணப் பட்ட ஈசுரம், சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும் அறுபத்து நான்கு என்று கூறும் கேசர வடிவாகும். சத்திதத்துவம் அக்கேசரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டு வடிவாகும். சிவதத்துவம் அப்பொகுட்டில் காணப் படும் ஐம்பத்தொரு ஈசவடிவாகும். ஆகலால், அவ்வித இயற்கையினை யுடைய இதயத்தாமரையில் முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாக உடைய அச்சிவனது சத்தி நிலைபெறும். அதனையறிந்து திருவஞ்செழுத்தால் அருச்சிப்பாயாக என்பதாம்.

இவ்வெடுத்துக் கூறிய உந்திக்கமலமானது உலகத்துக் கமலம் போல் மேல் நோக்காது, கீழ் நோக்கும் ஓர் திப்பியகமலம் என்று கொள்க. எனவே, சிவன் சத்திக்கு மேலாய் நிற்பனென்பதும் பெறப்பட்டதாயிற்று.

# முருகனே கலியுக தெய்வம் *

[திரு. P. பொன்னரங்க முதலியார் அவர்கள், B. A.]

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்றைய தினம் பேசும்படியாக எனக்குக் கொடுக்கப்பட்ட விஷயம் "முருகனே கலியுக தெய்வம்" என்பதாம். முருகப்பிரானுடைய பாதத்தின் உரோமம் ஒன்றில் அண்டங்களெல்லாம் அடங்கியிருக்கின்றன வென்றால், அவனுடைய பெருமையைச் சாதாரணமான என்போலியர் கூறும் தகைமைத்தோ! கலியுகத்தில் தமிழர்கள் வழிபடவேண்டிய தெய்வம் முருகனே. செவ்வாய்க் கோள் தாக்குவதால் குமரன் திருவருள் அவர்களுக்கு அவசியமானது. கலியுகத்தில் அணித்தே அனுக்கிரகம் செய்யக் கூடிய தெய்வமும் முருகனே. "கரியிணைக்கோடு" என்ற தொடக்கத்த திருப்புகழில் "இக்கலியுகத்தே புகழ் சிவபதத்தே பதித்தருள்வாயே" என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் "வரதா மணி நீ" என்ற பழனித் திருப்புகழில் முருகனை 'வரதர்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனிதர்க்கு மாத்திரம் அன்று, தேவர்க்கும் அண்மையில் அனுக்கிரகிக்கும் தெய்வம் என்பதை "ஆறு முகம் ஆறு முகம்" என்ற தொடக்கத்த திருப்புகழில் "தேவர் வரதா" என்று உரைத்தலான் அறிகிறோம். வரதர் என்றால் கேட்டதெல்லாம் கொடுப்பவர் என்பது பொருள். பழனியிலுள்ள ஆற்றுக்கும் வரநதியென்றுபெயர். பழனி முருகன் உருவத்தை அபிடேகம் செய்த பின்னர் உற்றுநோக்குவோர்க்கு 'என்ன வேண்டு'மென்று கேட்பதுபோல் தோன்றும். அப்படிக்கேட்பது சரியல்ல என்று "ஆறுமுகம்" என்று ஆரம்பிக்கும் திருப்புகழில் கூறுகின்றார். கலியுகத்திற்கு முருகனே தெய்வம் என்றும், வேறு தெய்வம் கூடாதென்பதும் என் கொள்கையல்ல. மற்ற மதத்தினரும் தங்கள் மதங்களில் இருந்தபடியே முருகனை வழிபடலாம். உதாரணமாக, சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைக் கற்களால் அருச்சித்த விஷயம் யாவரும் அறிந்ததே. அவர் தமக்குச் சிவன் பாலுள்ள அன்பு தம் மதத்தினர்க்கு வெளிப்படையாகாமல் இருத்தற் பொருட்டே பூக்களால் அருச்சியாது கற்களால் அருச்சிந்தார்.

கலியுகத்திற்கு 4,32,000 ஆண்டுகளென்றும், துவாபர யுகத்திற்கு அதைப்போல இரண்டு மடங்கு ஆண்டுகளென்றும், திரேதா யுகத்திற்கு மூன்று பங்கு என்றும், கிரேதா அல்லது சத்தியுகத்திற்கு நாற் பங்கென்றும் தயானந்த சரஸ்வதி சத்தியார்த்தப் பிரகாசிகையால் அறிகிறோம். திரேதாயுகத்தில் நடந்த இராமாயணத்தை, சரித்திர ஆராய்ச்சிக்காரர்

* இது 11-11-31ஆம் தேதியில் சிந்தாதிரிப்பேட்டை அங்காளம்மன் கோயிலில் திரு. P. பொன்னரங்கமுதலியார் அவர்கள் B. A. செய்த சொற்பொழிவின் சாரம். G. கல்யாணம் B. A. D. Econ கைக் குறிப்பினின்றும் எழுதப்பட்டது.

கி. மு. 700 ஆவது ஆண்டு நடந்ததாகக் குறிக்கின்றனர். துவாபரயுகத்தில் நடந்ததாகக் கூறப்படும் மகாபாரதம் கி. மு. 1400ல் நடந்ததென்று சொல்கின்றனர். ஆகவே, கலியுகத்தின் முதற் பாகத்தில்தான் தர்ம தேவதை சரியாக நடந்ததென்றும், மற்றக் காலங்களில் ஒன்று, இரண்டு பாதம் குறைந்து கலியுகத்தில் பாவம் நிறைந்திருத்தலால் ஒரு பாதத்தில் நடக்கிறதென்றும் சொல்வதெல்லாம் யுக்திக்குப் பொருத்தமானதல்லவென்று தோன்றுகிறது.

முருகவழிபாடு தொல்காப்பியத்திலும் இருக்கின்றது "சேயோன் மேவிய மைவரை யுலகம்" என்று அங்கு சொல்லப்பட்டது. குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன் என்பதைக் "குறிஞ்சிக் கிழவோனே" என்று அருணகிரிநாதர் திருப்புகழில் கொண்டாடுகிறார். ஒவ்வொரு மலையிலும் முருகன் இருப்பதால் "குன்று தோறாடல்" என்று ஒருபடை வீடாகக் கொள்ளுகிறார்கள். முருகனை, குழந்தை தெய்வமாகக் கொண்டாடுவது, "குழந்தை குருநாதா", "குழந்தை முருகேசனே", "குழந்தை வேல்" என்பவற்றால் விளங்கும். திருப்புகழில் "கைத்தல நிறை" என்ற விநாயகர் தோத்திரத்தில் "அச்சிறு முருகனை" என்று சொல்லியிருக்கிறார். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தே" என்பது இதை வற்புறுத்தும் போலும். அத்தகைய குழந்தை தெய்வம் வேறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கிருஷ்ண பகவானையும் கம்சவதத்தின் பின்னர்தான் தெய்வமாகக் கொண்டாடியதாகத் தெரிகிறது. ஐம்பத்து ஐந்து வயதுடைய ஒரு வியாதியஸ்தர் முன் ஒரு சிறுவன் தோன்றி சிகிச்சை செய்ததாக நாம் தமிழ்ப்* பத்திரிகை மூலமாய் அறிகிறோம். அச்சிறுவன் முருகன் அல்லவோ? குழந்தைகள் எது வைத்திருந்தபோதிலும் கொடுத்து விடும் சுபாவம் உள்ளவை. அதேபோல் குழந்தை முருகனும் கேட்டதெல்லாம் தருவான் என்பதற்கு ஐயமுண்டோ! குழந்தையாயிருந்தபோதும் தந்தைக்கு உபதேசித்ததால் "தகப்பன் சுவாமி" என்று அவரை அழைப்பர், அவ்வுபதேசத்தால் அவரே பிரணவமூர்த்தியென்று காட்டினார். பிரணவத்தின் மூலமாகத் தான் உலகம் உண்டாயது; பிரமாதிகள் தங்கள் தொழில்களை நடத்துவதும் அதனாலேதான். மற்றவர்கள் பிறப்பிடமாகிய பிரணவம் இவர்க்கு இருப்பிடம் என்றும், பிரணவமே தன் திருமேனியென்றும் காட்டினார். சூரபன்மனும் "கோலமா மஞ்சை மீதில் குலவிய குமரன் தன்னை, பாலன் என்றிருந்தேன் இந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான், மால் அயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ!" என்று சொல்கிறான். பஞ்சபூதங்களுக்குச் சக்தி கொடுத்து இயக்கவல்ல அஞ்செழுத்துடன் அருளாகிய குடிலையும் சேர்ந்து அறுமுக உருவம் அமைந்தது என்று பாம்பன் சுவாமிகள் திருத்தொடையலில் விளக்குகிறார். ஆகையால் ஐம்முகச் சிவனை விட அறுமுகச் சிவன் விசேஷம் என்றும் சொல்வதுண்டு. ஆனால் உண்மையில் சிவனிடம் அருவமாய் இருந்த அதோமுகம் வெளிப்பட்டு நிற்கும் மூர்த்தமே முருகன் என்பது திருமூலர் திருமந்திரத்தில்,

> "உண்டோர் அதோமுகம் உத்தமம் ஆனது
> கண்ட விச்சத்தி சதாசிவ நாயகி
> கொண்ட முகம்ஐந்து கூறும் கரங்களும்
> ஒன்றி ரண்டாக வேமூன்று நாலானதே"

என்றும்,

> "எந்தை பிரானுக்கு இருமூன்று வட்டமாய்
> தந்தை தன் முன்னே ஷண்முகம் தோன்றலால்
> கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
> மைந்தனிவ னென்ன மாட்டிக் கொளீரே"

என்றும் திருவாய் மலர்ந்திருத்தலால் அறியலாம். ஆதலால் அவரைச் சிவனுக்கு மைந்தன் என்று சொல்வது உபசாரமே. உண்மையில் இரண்டும் ஒன்றேயென்பதை நாம் மறக்கொணாது. அதேமாதிரியாக, விநாயகரும் சத்தியும்கூட ஐம்முகச் சிவனுக்கும் அறுமுகச் சிவனுக்கும் வேறல்ல என்பதைப் பாம்பன் சுவாமிகள் திருப்பாவில் கத்திய ரூபமாக விளக்கியுள்ளார். உண்மையில் முருகனுக்கு ஆறுமுகங்கள்தான் என்று சொல்வது அநியாயம். அவிவேகம் என்னும் திருத்தொடையலில் அவரே விளக்குகிறார். ஆறுமுகங்கள் என்பன, திரு, புகழ், ஞானம், வைராக்கியம், வீரியம், ஐசுவரியம் என்பதை "வாதினை யடர்ந்த" என்ற தொடக்கத்துத் திருப்புகழில், "ஆதியொடந்தம் ஆகிய நலன்கள் ஆறுமுகம் என்று அறியேனே" என்று சொல்லப்பட்டிருக்கிறதால் அறியலாம். அதேவிதமாக, பனிரண்டு கரங்களும் பனிரண்டு மாதங்கள் அல்லது பனிரண்டு இராசிகள் என்றும் சொல்வர். வள்ளி ஆன்மாவென்றும், வேடர்கள் ஐம்புலன்கள் என்றும், தினைப்புனம் உலகம் என்றும், சிற்றேனல் அற்பப் பொருள்கள் என்றும், பறவை யோட்டல் மாயையை விலக்குதல் என்றும், வள்ளியை மணந்தது ஜீவேசுவரருடைய ஐக்கிய பாவம் என்றும், சண்முகலகரியில் காட்டப்பட்டிருக்கிறது. "விரவும் ஐம்புலப்பொய் வேடர் அவசமுற்ற வித்தையால் திரிதலுற்ற ஜீவாத்ம சிறுக்கி வள்ளியைச் சிறை பரிந்தெடுத்து அணைத்து ஐக்கிய பாவமாய்ப் புணர்ந்தனன்" என்று கூறப்பட்டிருக்கிறது. அதேபோல், மயில் என்பது பிரணவம் அல்லது சுத்தமாயை அல்லது விந்துவென்றும், கோழியென்பது நாதம் என்றும் கொள்கின்றனர். காலையில் கோழி கூவுவது "கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே" என்று மணிவாசகப் பெருமான் அருளிய வாக்கு நமக்கு ஞாபகமூட்டுகிறது. மேலும், அப்படிக் கூவுதல் நமது ஆணவமாகிய இருளைக் கடிந்து உள்ளத்தில் எழுகின்ற ஞானசூரியனாகிய முருகனது வருகையைக் குறிக்கின்றது. அத்தகைய கோழியைக் கொன்று தின்னல் கூடாதன்றோ? ஜீவகாருண்யம் இல்லாத பக்தி வீண்; பக்தியில்லாத ஞானம் வீண். இதை வள்ளலார் "பக்தியால் யோகம் (அதாவது பாசவைராக்கியம்) சாரும், யோகத்தால் பரமஞானம் சித்தியா நிற்கும், இதற்கு ஆதாரம் ஜீவகாருண்யமன்றே" என்று கூறியிருக்கின்றார்.

* சுதேசமித்திரன் 25 7-1929.

நாம் காலையில் எழுந்து முருகனைத் துதித்தல் வேண்டுமென்பதை "மாலைதனில் வந்து" என்ற கும்பகோணத் திருப்புகழில், "காலையில் எழுந்துன் நாமமும் மொழிந்து காதலுமை மைந்த என ஓதி" என்று அருணகிரியார் சொல்லுகிறார். துன்பம் வந்தாலும் அவரை வழிபட வேண்டும். காலையில் ஒருதரம், இரவில் ஒருதரம் துதித்தாலும் போதும் என்று கிருஷ்ணபகவான் நாரதருக்கு விளக்குகிறார். நீறிட்டு அவரை நினைக்கவேண்டும். "திருவாய் பொலிய சிவாயநம என்று நீறணிந்தேன்" என்ற அப்பர்சுவாமிகள் கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. "நீறிட்டு நினைபவர் நெஞ்சுளே நேசமெத்த அளித்தருள் சற்குரு" என்றும், "அரகரசிவாய வென்று தினமும் நினை"! என்றும் திருப்புகழில் கூறப்பட்டிருக்கின்றது. அவர் வெளியிலிருப்பதாக நினைப்பதைவிட இதயகுகையில் (தகராலயத்தில்) இருப்பதாக வழிபடுதல் விசேஷம். இந்த வழிபாட்டால் அவருடைய தெய்வத்தன்மை அடையலாம். "தன்மயமாக்கும் சக்தி" அவருக்குளது. அவர் அருளுக்குப் பாத்திரமாக வழியெப்படி யெனில் "தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை, தானம் என்றும் இடுங்கோள்" என்றும், "இருந்தபடி யிருங்கோள்" என்றும் கந்தரலங்காரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இருந்தபடி யிருத்தலாவது நிட்டை, சும்மா விருத்தலாம். "நன்னெஞ்சோடமரும் நிட்டை" என்பர் பாம்பன் சுவாமிகள். "மனமிறக்கக் கல்லார்க்குவாயேன் பராபரமே" என்றும், "சொல்லான் மௌனம் மௌனம் என்று சொல்லிக்கொண்டதல்லால் மனமறப் பூரணநிட்டையில் இருந்ததுண்டோ" என்றும் தாயுமானவர் கூறியிருக்கின்றார். நிட்டையை இல்லறத்தோரும் செய்யலாம். அப்படிச் செய்ய முடியாதவர்கள் உபாயநிட்டை அதாவது எல்லாம் சிவன் செயல் என்று இருப்பதை அனுசரிக்கலாம். அதுவும் கூடாவிட்டால் சிவோகம்பாவனை செய்யலாம். "சோதியுணர்கின்ற வாழ்வு சிவம் என்ற சோகமது தந்து எனை ஆள்வாய்" என்று திருப்புகழில் கூறப்பட்டிருக்கிறது. அதுவும் முடியாவிட்டால், ஐந்தெழுத்து அல்லது ஆறெழுத்தால் வழிபடலாம். அதுவும் தெரியாதவர்கள் அவர் நாமங்களை உச்சரிக்கலாம். அந்த நாமங்களில் மிகச் சிரேட்டமானது முருகன் என்பது. அதற்கு இளமை, மணம், அழகு, தெய்வத்தன்மை என்னும் பொருள்கள் இருந்தபோதிலும் முக்கியமாய் நான் எடுத்துக்கொண்ட விஷயத்திற்காக தெய்வத்தன்மையைப்பற்றி இங்கு கவனிக்கவேண்டும். "என்றும் இளையோனே" என்று திருப்புகழிலும், "அழகினுக்கழகினை ஊர்ந்து செலும் அழகே" என்றும் மயிலைப்பற்றிப் பாம்பன் சுவாமிகள் குமாரசுவாமியத்திலும், முருகு என்னும் பதம் இளமை, அழகு என்னும் பொருளில் வருவதை அறிகிறோம். "சுடரனைய திருமேனி" என்ற தொடக்கத்த திருப்புகழில் "மொழிவேத மணம் வீச" என்பதாலும், "நாவேறு பாமணத்த பாதாரம்" என்றிருத்தலாலும் அவருடைய மணம் எத்தகையது என்று அறியலாம். ஆனால் நான் முக்கியமாய்க் கலியுகதெய்வம் என்பதைக் கவனிக்கும்போது அவருடைய தெய்வத்தன்மையை யோசிக்க வேண்டியிருக்கிறது.



"ஆறுமுகத்தில் அதிபதி நான் என்றும்
கூறு சமயக் குருபரனென்றும்
தேறினர் தெற்கு திருவம் பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே"

என்று திருமந்திரத்தில் கூறுகிறபடி எல்லாச் சமயங்களுக்கும் அவரே குரு என்று அறிகிறோம். கந்தரனுபூதியிலும், "முருகன், குமரன், முனி நம் குரு வென்று அருள் கொண்டறியார் அறியுந்தரமோ" என்று விதந்தோதியிருக்கின்றார். எல்லாச் சமயங்களுக்கும் குருவாயிருப்பதால்தான் ஆறுமுகம் ஆறு சமயம் என்று சிலர் கூறுவர். ஆனால் அவர் சமயங்கடந்த மோன நிலைக்கும் அதிபர் என்று காட்டவே சுவாமி மலையில் "யோகத் தமர்ந்த பெருமாளா"க விளங்குகிறார். இந்த உண்மையை அங்குக் கோயிலில் தீட்டப்பட்டுள்ள சித்திரத்தில் காணலாம். ஆண்டிக்கோலத்துடன் அவர் அமர்ந்திருக்க, அவர் முன்பு சிவபெருமான் கைகட்டி வாய்புதைத்து நிற்பதை நாளைக்கும் பார்க்கலாம். அப்படி மாணாக்கராக இருப்பவர் திரிபுர தகனர் என்றால், முருகன் பெருமைக்கு அளவுண்டோ? இங்கே முப்புரம் எரித்தது மும்மல நீக்கம் என்பதைத் திருமூலர்,

"அப்பணி செஞ்சடை யாதிபுரா தனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே"

என்னும் பாவில் விளக்குகிறார். அதே மாதிரி சூரசம்மாரத்திற்கும் சூரனாகிய ஆணவத்தை யொழித்த வைபவம் என்று சொல்வர். சூரன் தன் அகங்காரம் நீங்கினவுடன் முருகனுக்கு வாகனமாகவும், கொடியாகவும் அமரக்கூடிய பேற்றைப் பெற்றான். ஆகையால் முருகன், தன்னை விரோதித்தவர்க்கும் அருள் புரிவான் என்பது திண்ணம். முக்கியமாய், "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பான்" என்ற கந்தரலங்காரக் கூற்று நாம் நோக்கத்தக்கது. மேலே சொல்லியவாறு ஈசனுக்கு உபதேசம் செய்ததும் தமிழ் மொழியாலேதான் என்பதை "ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே" என்ற அருணகிரியார் கூற்று தெரிவிக்கிறது. ஆகையால் தமிழ் மொழியால் அவரை வணங்குவது நம்முடைய கடமை. அப்படி வணங்கினால் "இகபரசவுக்கியம்" அருள்வர்; "சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு" அளிப்பர்; "உலகம் என்று பேச அறியாத உருவமொன்றில்லாத பருவம் வந்து சேர" அனுக்கிரகிப்பர். இம்மட்டோ! நரைதிரைகளும் வாராச் செம்பொன்மேனி யுண்டாகச் செய்வர் என்பதை "நின்மலச் செஞ்சோதி வடிவுடையவனை அநவரதம் நினைப்போர்க்கு என்றும் பொன்மயச் செம்மேனி வடிவுண்டாகும், நரைதிரைகள் பொருந்தா" என்ற பாம்பன் சுவாமிகள் திருத்தொடையல் பாட்டால் அறிகிறோம். இங்கே 'அநவரதம் நினைப்போர்' என்பது கவனிக்கத்தக்கது. திருவாசகத்திலும் "ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை" என்றார் மணிவாசகப் பெருந்தகை. ஆனால் அவரை உள்குவார் பாசற்ற நெஞ்சுடையவராக

இருக்கவேண்டும்; புலால் கமழாத வாயுடையவராக இருக்கவேண்டும். இம்மட்டோ! சிறிதும் பொய் பேசாத வாயுடையவராக இருக்கவேண்டும். ஏனெனின், "அகத்தூய்மை வாய்மையால் வரும்" என்று தமிழ்மறை முழக்குகிறது. "வாசித்துக்காணொணாதது—" என்ற திருப்புகழில் "நெஞ்சினாலே மாசர்க்குக் காணொணாதது" என்று கூறப்பட்டிருக்கிறது. பட்டினத்தடிகள் "பொய்யை ஒழியாய்" என்று ஒரு பாட்டை ஆரம்பிக்கிறார். அருட்பாவில் ஷண்முகக் கும்மியில் "பொய் வந்த உள்ளத்தில் போகாண்டி" என்று உரைக்கப்பட்டிருக்கிறது. "பொய்யர் பொய்ய, மெய்யர் மெய்ய" என்று திருப்புகழில் கூறுகிறார். திருவாசகத்தின் திருப் பொற்சுண்ணப் பதிகத்தில் "பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யை" என்று சொல்கிறார். ஆகையால் பொய் சிறிதும் இன்றி அவரை வழிபட வேண்டும். அப்படிப்பட்ட தூய வழிபாடுதான் அவர் உவப்பது. அப்படிப்பட்ட தூய்மையுடன், முருகா! என்று நாம் ஓதினால்தான் "ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவார்முன்" என்று திருமுருகாற்றுப்படையிலும், "முருகா எனவோர் தரமோதடியார் முடிமேல் இணைதாள் அருள்வோனே" என்று திருப்புகழிலும், "முருகா என்று உனைஓதும் தவத்தினர் மூதுலகில், அருகாத செல்வமடைவர், வியாதியடைந்து நையார் ஒருகாலமும் துன்பமெய்தார், பரகதியுற்றிடுவார், பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப்புண்ணியனே" என்று திருப்போரூர்ச் சந்நிதிமுறையிலும் கூறப்பட்ட ஆன்றோர் வாக்குகளுக்கு இலக்காவோம். ஆகவே, நாம் எல்லோரும் காலையில் எழுந்து குழந்தை வடிவமாகவாவது அல்லது மற்ற எந்த வடிவமாகவாவது முருகனைப் பாவித்துத் திருப்புகழ் முதலியன சொல்லிப் பூசித்தாலும் சரி; அல்லது அருவமாகிய அவர் பரவெளி யுண்மையைச் சிந்தித்துத் தியானித்தாலும் சரி; அல்லது அவர் அருமைத் திருநாமங்களாகிய முருகன், குமரன், குகன், குமரகுருபரன், சரவணன், சண்முகன் முதலிய சொல்லி வாழ்த்தினாலும் சரி; அன்றி பிரணவம், ஐந்தெழுத்து, ஆறெழுத்து முதலியவை கொண்டு வணங்கினாலும் சரி; இதனால் நமக்கு இம்மையில் எல்லாச் சுகங்களும், பரகதியும் கிடைக்கும் என்பதை மறவாமல் அநவரதமும் அவரை வழிபட்டுய்யத் திருவருள் நம்மை உந்தும்படியாக வேண்டி நான் இத்துடன் என் சொற்பொழிவை நிறுத்துகின்றேன்.

## "சம்பந்தரும் சோதிடமும்"

[ஈ. த. சோக்கம்மாள், பி. ஏ., எல். டி.]

மேற்கண்ட தலைப்புடன் திரு. வண்ணை வை. இராமநாதன் அவர்கள் "இந்து சாதனத்தில்" எழுதியது சென்ற ஐப்பசி "சித்தாந்தத்தில்" வெளியிடப்பட்டதைக் கண்ணுற்றேன். வியாக்கியானம் செய்யும் உரையாசிரியர் பதவியை யான் வகிக்க விரும்பவில்லையாயினும், ஸ்ரீமான் சோமசுந்தர தேசிகர் விரும்பிய வண்ணம், புரட்டாசித் திங்கள் பத்திரிகையில் எனதபிப்பிராயத்தைச் சிறிது வெளியிடல் எனது கடமையாயிருந்தது. எம்மிருவர் வியாக்கியானத்தையும் பூர்வபட்சம் செய்து இலங்கையாசிரியர் தமது சித்தாந்தத்தை வெளியிட்டது வியக்கத்தக்கதே. எனதுரை பிழையாயுமிருக்கலாமென்றே எண்ணியதையும் ஒருவாறு குறிப்பிட்டுள்ளார். ஆயினும் திருவாளர் வண்ணை. வை. இராமநாதன் அவர்கள் வியாக்கியானமோ பலவாற்றானும் சம்பந்தர் "வேயுறுதோளிபங்கன்" பதிகத்திய இரண்டாம் பாசுரத்திற்குப் பொருந்தாதாகவே காணப்படுகின்றது.



"இந்து சாதன" உதவி ஆசிரியர் ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டொடாறும்" என்பதற்கு 9+1+7+18+6=41. அவையாவன 27 நட்சத்திரம் 14 திதி ஆக நாற்பத்தொன்று, அவற்றுடன் உரையிற் கோடலாய் அமாவாசை பௌர்ணிமை ஆகிய நாற்பத்து மூன்றென்று விளக்கினார். இக்கருத்து புகலிவேந்தருண்டேயதெனின் அப்பாசுரம் சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபெறாததும், வெற்றெனத் தொகுத்தலென்னும் குற்றம் பெற்றதும் ஆகும் என்று கூறவேண்டும். 'ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டொடெட்டு முடனாய நாள்கள்' எனக் கூறுவாராயின் சீர், சந்தம் மாறாது நிற்கும். கற்போருக்கும் உரையில் வருவித்துப் பொருள்கொள்ளும் அவசியமுமிராது. உலக வழக்கில் ஆகாதநாள் அமாவாசை யென்று கூறுவதுண்டாதலால் அமாவாசை பூரண அமாவாசை என்னும் முக்கிய நாட்களை உரையிற் கொள்ள "பதினெட்டொடெட்டும்" என்னாது "பதினெட்டொடாறும்" என்றார் போலும்.

இஃதன்றியும் உரையிற்கோடல் உத்தியாய் அமாவாசை பௌர்ணிமையைக் கொண்டாலும் வளர்பிறைத் திதிகளுக்கும் தேய் பிறைத் திதிகளுக்கும் நாமம் ஒன்றாயிருப்பினும் நாள்கள் ஒன்றெனக் கொள்ளலாமோ? வளர்பிறை தசமிக்கும் தேய்பிறை தசமிக்கும் உள்ளபேதம் தஞ்சாவூர் இராமசாமிக்கும், திருநெல்வேலி இராமசாமிக்கும் உள்ளபேதம் போலன்றோ? தேய்பிறை நாட்களில் பஞ்சமிக் கப்பாற்பட்ட திதிகள் நற்காரியங்களுக்குப் பயன்படாவெனச் சோதிடர் கூறுவதும் அத்திதிகளில் சில வளர்பிறையில் மிகவும் சிறந்தனவெனக் கொண்டாடுவதும் சோதிடவழக்கமன்றோ? ஆகையால் திதிகள் நட்சத்திரங்களின் மொத்த சங்கை நாற்பத்தொன்றன்று. உரையில் கொண்ட நாற்பத்து மூன்று மன்று, ஐம்பத்தேழாகும் [(27+14+14+2)=57] மற்றும் திதிகளை வளர்பிறை தேய்பிறையென்று பேதப்படுத்தலாகாது பொதுப்படையில் எடுத்து மேற்கண்ட முக்கிய திதிகளையே உரையில் கொள்ள நமக்கு சம்பந்தர் விட்டாரென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்?

மற்றும் சம்பந்தர் தற்காலக் கவிகள்போல எதுகைக்காக ஒன்பதைத் தேர்ந்தெடுத்தாரெனின் மேற்கண்டார் உரைப்படி சொற்றொடர்களைப் பொருத்தச் சக்தியற்றவர்போல் சம்பந்தர் காணப்படுகின்றார். நமது சமய குரவர்களின் எல்லாப் பாக்களும் பத்தழகும் பொருந்தியவை யாகையால் அவற்றைச் சீர்திருத்த பிரமனாலும் முடியாத காரியமென்பது யாவரும் அறிந்ததே. அங்ஙனமிருக்கத் திருவாளர் இராமநாதன் அவர்கள் உரையை அப்பாவுக்குக் கொடுப்போமாயின் அந்த இரண்டாவதடியானது "ஒன்பதின் மூன்று மீறுமொளியற்ற திங்கள் வளர்தேய்வு பெற்றவவையும்"

என்றிருப்பின் மேலாயிருக்குமன்றோ? இக்கருத்து அமைக்க வேண்டுமென்று சம்பந்தர் எண்ணியிருப்பின் இதற்கும் மேலாகப் பாடுவாரேயன்றி வெற்றெனத் தொடுத்து மயங்கவைத்து ஒழிந்தவைகளை உரையிற்கொள்ள நமது சமய குரவரில் முதல்வர் விடாரென்பதே சைவர் துணிபாம்.

இதன்றியும் திருவாளர் இராமநாதன் அவர்கள் "வேயுறுதோளி" யென்று முதற் செய்யுளில் நவக்கிரகங்களையும் நல்லனவென்றதால், இரண்டாம் செய்யுளில் 27 நட்சத்திரங்கள் நல்லன என்பதே சம்பந்தர் கருத்தென்றார். முதற் செய்யுளில் காட்டிய கோள்களானவை நவக்கிரகமெனப்படும். அவை ஒன்பதில் ஒவ்வொன்று ஒருவனுக்கு உச்சஸ்தானத்திலிருக்குமாயின் அளவற்ற நன்மை பயப்பனவென்பதும் நீசஸ்தானத்தை அடையின் துன்பம் விளைக்குமென்பதும் சோதிடத்துணிவு. திங்கள் வியாழம், புதன் நீசஸ்தானத்தில் துன்பம் விளைப்பதையும், இராகு, செவ்வாய் முதலிய உச்சத்தில் நன்மை பயக்குமென்பதையும் நாம் காணவில்லையா? ஆகையால் முதற் செய்யுளில் நவக்கிரக சேஷ்டை சிவனடியார்களை நலிவிக்காதென்றதால் ஏனையோர்களுக்கு அவையாவும் துன்புறுத்துங் கோள்களென்பதே சம்பந்தர் கருத்தென்னலாம். அதற்கு ஒத்த சான்றுகளும் அவர் தேவாரத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றன.

அவ்வாறு 27 நட்சத்திரங்களெல்லாம் துன்புறுத்துவன என்று எண்ணுவதற்கிடமில்லை. புனர்பூசம் எக்காலத்திலும் சித்தயோக, அமிர்தயோக சம்பந்தமாயிருப்பதைச் சாதாரண பஞ்சாங்கங்களிலும் காணலாம். இதன்றியும் நாளைக்காட்டிலும் நட்சத்திரம் விசேடமானது. நல்ல கிழமையாயும் நல்ல திதியாயிருப்பினும், கேட்டை முதலிய துர்நட்சத்திர சம்பந்தமிருப்பின் மாந்தர் அவற்றை ஏலார். ஆனால் நல்ல நட்சத்திரத்தில் துர்த்திதி கிழமையிருந்தாலும் கவனியாமல் மாந்தர் காரியங்களை நடத்துவார். நல்லவை நல்லவை என்பது வெற்றுரையன்று. அல்லாதவையைக் குறித்து 'இவை நல்ல நல்ல அடியார்க்கு' என்றதால் ஏனையோர்க்கு அவை நல்லவையன்று என்பது குறிப்பேயாம். நல்லவை தமதியற்கையாகவே அடியாரல்லாதவற்கும் நல்லன புரிவதால் அடியார்க்கு மட்டும் துன்பம் பயக்குமோ? ஆனால் கெட்ட நட்சத்திரங்களைச் சம்பந்தர் பாடினாரன்றி எல்லா நட்சத்திரங்களையும் எண்ணினார் என்னும் உரை 4-வது அடியில் உள்ள "அடியார்க்கு" என்னும் மொழியால் ஒவ்வாததாகக் காணப்படுகின்றது.

சம்பந்தர் உலகத்திலுள்ளவைகளில் நல்லவை அல்லவை எல்லாம் அடியார்களுக்கு ஏகமென்று எப்போதுங் கொள்ளவில்லை. அல்லதை யொழித்து நல்லதை நிலைநிறுத்தும் அடியார்களுக்கு நம்மைவிட இப்பகுதியில் ஆழ்ந்த கவனம் உண்டென்பது திண்ணம். உலகத்தில் துன்பம் செய்வன இருந்தபோதிலும் சிவபெருமான் திருவுள்ளத்தில் பொருந்தியிருப்பவர்களுக்கு அவை துன்பம் செய்யாமல் நல்லவைபோல ஒழுகுமென்பது இப்பதிகத்தின் ஒவ்வொரு பாசுரப் பல்லவியாயிருக்கின்றது காண்க.



இதன்றியும் நட்சத்திரங்களில் சில தீயனவென்று ஒரு பட்சத்தார் கூறுவதும், அவற்றுள் சிலவும், வேறு சிலவும் தீயனவென மற்றொரு பட்சத்தார் கூறுவதும் பின்னும் ஒரு கட்சி வேறு சிலவற்றைக் கூறுவதுமான பேதங்கள் சாஸ்திர ஒழுங்குக்கு முரணாகாதிருப்பின், இவற்றைத் தழுவி ஒரு கட்சியின்பாலும் சேராது ஒவ்வொரு கட்சிக்கும் பொருள் தருமாறு இரட்டுற மொழிதல் சித்திரக்கவிகள் தன்மையன்றோ? சிலேடையெனபது மயங்கவைத்தலாகுமோ? ஆகையால் இலங்கை வியாக்கியானத்தை நான் ஆமோதிக்க கூடாமைக்கு வருந்துகின்றேன்.

# சமாஜ இருபத்தாறும் ஆண்டு விழா

[காரியதரிசி]

இவ்விழாவும் இதையொட்டிய சைவர் மகாநாடும், சைவ இளைஞர் மகாநாடும், சைவ மங்கையர் மகாநாடும், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் நாற்பத்தெட்டாம் ஆண்டு விழாவும் மிகச் சிறப்பாக 1931௵ டிசம்பர்௴ 27௳ ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று நாட்கள்வரை நடைபெற்றன. சனிக்கிழமை இரவு (26-12-31) நம் சமாஜத்தினர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மேளவாத்தியங்களோடு ஊர்வலமாக வரவேற்கப் பெற்றனர். ஞாயிற்றுக்கிழமை காலையில் உயர்திரு சுந்தர ஓதுவா மூர்த்திகள் தென் திருவிதாங்கூர் திருநெறித் தொண்டர் குழாம் முதலிய அடியார் கூட்டங்களுடன் திருக்கோயில் வழிபாடும் திருவீதி வலமும் செய்து தமிழ் மறையோதினார்கள். இவ்விழாவுக்குக் குறிப்பிட்ட தலைவர் சைவத்திரு - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தாம் வர இயலாமையையும், தாம் தொடங்கிய பிரயாணம் வெள்ளத்தினால் நடுவழியில் தடைபட்டமையையும் விளக்கி, "Sorry heavy flocds impossible travel excuse absence Kathiresan" என்ற தந்தி மூலமாகவும், மற்றோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ள கடிதத்தின் மூலமாகவும் தமது பருவுடல் தூத்துக்குடிக்குச் செல்லாவிடினும் தமது மனம் விழாவிலேயே பதிந்துள்ள செய்தியையும் அறிவித்தார்கள். இவைகளைக் கருதியபிறகு சமாஜத்தினரும் தூத்துக்குடியிலுள்ள வரவேற்புக் கழகத்தினரும் சைவ சித்தாந்த சபையினரும் சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்களைத் தலைமை வகிக்கும்படி வேண்டிக்கொண்டனர். அவர்களும் அன்புடன் இசைந்தார்கள். முதல் நாள் (ஞாயிற்றுக்கிழமை 27-12-31) மாலை 3¼-மணிக்குத் தமிழ் மறை முழக்கத்துடனும், மன்னர் வாழ்த்துடனும் பேரவை தொடங்கிற்று. காரியதரிசி முன் மொழிய, தூத்துக்குடி சபையினர் பின் மொழிய தலைவரவர்கள் அவைத்தலைமை பூண்டார்கள். வரவேற்புக் கழகத்தலைவர் திரு. இ. வெண்ணிமாலைப் பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல். சமயநிலை, சீர்திருத்தம் முதலிய குறிப்புக்

ஏடங்கிய தமது வரவேற்புப் பேருரையை நிகழ்த்தினர். பிறகு திரு. M.A.S. முத்துப்பிள்ளையவர்கள் தூத்துக்குடி சபையின் 48-வது ஆண்டு அறிக்கைப் பத்திரத்தை வாசித்தார்கள். இது அச்சிட்டுப் பேரவையில் வழங்கப்பட்டது. பிறகு சமாஜக் காரியதரிசியால் சமாஜத்தின் 26-வது ஆண்டு அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதுவும் மகாநாட்டில் வழங்கப்பட்டது. மற்றோரிடத்திலும் இவ்விதழில் இதைக் காண்க. இதன்பிறகு ஏறக்குறைய இரண்டு மணி நேரம்வரை தலைவரவர்கள்தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள். (இதைக் குறிப்பெடுத்துத் தொகுத்து எழுதித்தர தூத்துக்குடி சபையைச்சார்ந்த திரு. S. முத்துக்குமாரசாமிப் பிள்ளையவர்கள் அன்புடன் ஒப்புக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து கிடைத்தவுடன் இது நமது பத்திரிகையில் வெளியிடப்படும்.) தலைமையுரை முடிந்தவுடன் பேரவையினர் மாலைக்கடன் அநுட்டானம் முதலியவைகளை முடித்தற் பொருட்டு கலைந்து அவைகள் முடிந்தவுடன் மீண்டும் கூடினர்.

முதன் முதலாகத் திருமயிலாப்பூர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவசாரியாரவர்கள் "சிவாலய வழிபாட்டின் நுட்பங்களை" யெல்லாம் மிக அழகாகவும் ஆகம மேற்கோள்களுடனும் விளக்கினார்கள். (இச்சொற்பொழிவின் சாரம் அடுத்த இதழில் வெளிவரும்). பிறகு திரு. ரா. பதுமநாபப் பிள்ளையவர்கள் "இராமலிங்க சுவாமிகளும் திருவருட்பாவும்" என்பது பற்றியும் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் "நம்பியாரூரரும் நமது வாழ்க்கையும்" என்பது பற்றியும், திரு. கெ. ஆறுமுகம் பிள்ளையவர்கள் "மார்கழித் திருவிழா" என்பது பற்றியும் அரிய செந்தமிழ்ச்சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவரவர்கள் சொற்பொழிவுகள் பற்றிய கருத்துரையைத் தெரிவித்த பிறகு தமிழ் மறை முழக்கத்துடன் இரவு பன்னிரண்டு மணிக்குச் சபை கலைந்தது.

மறுநாட் காலையில் (திங்கட்கிழமை 28-12-31) நம் சமாஜத்தின் காரியக் கூட்டம் நடைபெற்றது. 27-வது ஆண்டின் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் (இவர்கள் பெயர்களை மற்றோரிடத்திற் காண்க). திருவாசகத்தை ஒவ்வொரு பதத்துக்கும் பொருளை விளக்கும் பொழிப்புரையோடு "சித்தாந்தம்" வாயிலாக ராயல் அளவில் வெளியிடவேண்டுமென்றும் அஃது உரை திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம்., எல். அவர்களால் எழுதப் பெற்று, திருவாளர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, பண்டித மணி. மு. கதிரேசச் செட்டியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், அ. மு. சரவண முதலியார் ஆகிய நான்கு பேரறிஞர்களால் செப்பஞ் செய்யப்பெற்று வெளியிடப்படல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. இளைஞர் மகாநாடு கூடினபடியால் காரியக் கூட்டம் பிற்பகலுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இரண்டாம் நாள் மாலை (28-12-31) $3\frac{1}{2}$ மணிக்குத் தமிழ் மறை முழக்கத்தோடு மீண்டும் சபை கூடிற்று. முதன்முதலாக சமாஜக் காரியதரிசி



யால் கீழ் வரும் தீர்மானங்கள் விளக்கப்பட்டு சபையினரால் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள்:—(1) சமாஜ வளர்ச்சி, சமய வளர்ச்சி முதலியவற்றைக் கருதி, கீழே குறிக்கப்பட்டுள்ள சமாஜப் பேரறிஞர்கள் கீழ் வரும் அரும்பணிகளை மூன்று மாதகால வளவைக்குள் முடித்துத் தரவேண்டுமென்றும் அவர்களால் தரப்படும் குறிப்புக்கள் சமாஜத்தினரால் வெளியிடப்படல் வேண்டுமென்றும் அப்பேரறிஞர்கள் பால் சமாஜம் வைத்துள்ள அன்புரிமையின் துணை கொண்டு இம்மகாநாடு வற்புறுத்துகின்றது. திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் பணி: 100 சொற்பொழிவுகட்குரிய குறிப்புக்களைச் செப்பஞ் செய்து தருதல்; திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் பணி: தமிழ் மறையில் உயர்ந்த கருத்துடைய நூறு பாட்டுகளுக்கு பதவுரை, விசேடவுரை எழுதித் தருதல்; பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் பணி: சென்ற ஆண்டிலேயே செய்வதாக ஒப்புக்கொண்ட திருவாசகத்தில் ஆயிரம் மணிவாசகங்களைப் பொறுக்கித் தருதல்; திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் பணி: தமிழர்கள் சமயம், பழக்கம், ஒழுக்கம் முதலியவற்றைக் கூறும் சங்க நூற் சொற்றொடர்கள் ஐந்நூற்றை விளக்கக் குறிப்புக்களுடன் தொகுத்துத் தருதல்; திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் பணி: பெரிய புராணத்தில் உயர்ந்த கருத்துக்களுடைய முந்நூறு பகுதிகளைக் குறிப்புரையுடன் திரட்டித் தருதல், திரு. ந. சிவகுருநாதன் பிள்ளையவர்கள் பணி: சைவ சமய நுட்பங்களை இக்காலத்து வரும் பல இயக்கத்தவரும் உணரும் வகையில் முந்நூறு வினாவிடைகள் மூலமாக விளக்குதல்; திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்களும் வேறு பல ஆங்கிலங்கற்றுள்ள சைவர்களும் செய்யவேண்டிய பணி: சமய நூல்களையும் அறிவியல் நூல்களையும் ஒன்றுபடுத்தி ஒப்பிட்டு விளக்கும் ஆங்கில நூல்களைப் படித்து அவற்றின் முக்கியமான பகுதிகளை அவ்வப்போது மொழி பெயர்த்து "சித்தாந்தம்" வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிடுதல். (இந்நூல்களின் பட்டி. அடுத்த இதழில்வெளிவரும்.)

(2) சைவ சபைகளில் தலைமை வகிக்கும் பேரறிஞர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தும் பெரியார்களும் தாங்கள் கூறும் பொருள்களை இயன்றால் விரிவாக, இன்றேல் சுருக்கமாக எழுதித் தந்து அச்சபைகளின் மூலம் சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(3) ஒவ்வொரு சைவ சபையிலும் குறைந்தது இரண்டு இளைஞர்கள் இதுமுதல் ஓராண்டுக்குள் தமிழ் சுருக்கெழுத்தைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது. (இத்தீர்மானத்தை யொட்டி தூத்துக்குடி சபையைச்சார்ந்த திருவாளர்கள் T. S. S. சங்கரநாராயண பிள்ளை, M. A. S. முத்துப்பிள்ளையவர்கள் தமிழ்ச் சுருக்கெழுத்து (Tamil Shorthand) பயிலுவதற்கு ஒப்புக்கொண்டார்கள்.)

(4) ஒவ்வொரு சைவ சபையிலும் குறைந்தது நான்கு பேராவது ஒருங்கு சேர்ந்து வாரத்துக் கொருமுறையாவது பன்னிரு திருமுறை பதினான்கு சாத்திரங்களை முறையாகக் கற்கவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(5) ஒவ்வொரு சைவ சபையிலும் குறைந்தது நான்கு பேராவது ஒருங்குசேர்ந்து வாரத்துக் கொருமுறை தமிழ் மறையோதிக்கொண்டு திருக்கோயில் வழிபாடு செய்து திருக்கோயிலில் திருமுறை வாக்கியங்களில் ஒன்றைச் சொற்பொழிவு மூலமாக எளிய மக்களுக்கு விளக்கவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது. இவ்வாறு வாரந்தோறும் பணி செய்வதாகத் தூத்துக்குடி சபையைச் சார்ந்த திருவாளர்கள் சி. வ. ந. சின்னக்கண்ணு பிள்ளை பி. ஏ., பி. எல். K. L. K. கந்தசாமிப்பிள்ளை, M. சங்கர சுப்பிரமணியம் பிள்ளை, பி. ஏ., பி. எல். இ. வெண்ணிமாலை பிள்ளை, பி. ஏ. பி. எல்., M. A. பெரும்படையான் பிள்ளை, பி. ஏ., பி. எல்., T. சங்கரநாராயண பிள்ளை, பி. ஏ., M. முத்துவிநாயகம் பிள்ளை, P. சுப்பையா பிள்ளை, S. D. K. லிங்கம் பிள்ளை, S. சுப்பையா பிள்ளை, N. கந்தப்ப பிள்ளை, S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஆகிய பன்னிரு அன்பர்கள் இத்தீர்மானம் நிறைவேறியவுடன் முன் வந்தது பேரவையினர்க்குக் களிபேருவகையை யளித்தது.

(6) தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என்று வெறும் பேச்சுப் பேசுவதை விடக் குறித்த சிலர் குறித்த சில ஆதிதிராவிடர்களை முன்னேற்றும் பணியில் ஈடுபடுவது நல்ல முறையாகுமென இம்மகாநாடு கருதுகின்றது.

(7) செல்வர்கள் சமயத்துறையில் பணி செய்வோர்க்கு உதவி புரிதல் வேண்டுமென்றும், பெண் மக்கள் தங்களைச் சேர்ந்த ஆண் உறவினரைச் சமயப் பணி செய்யும்படி பல வழிகளிலும் வற்புறுத்த வேண்டுமென்றும் இம்மகாநாடு கருதுகின்றது.

மேற்கூறிய தீர்மானங்கள் நிறைவேறிய பிறகு தலைவரவர்கட்கு ஆதிதிராவிடர் முன்னேற்றத்தைப்பற்றி அனுப்பப்பட்ட ஒரு கடிதத்துக்குத் தலைவர் கட்டளையின்படி காரியதரிசி விடை கூறினர். அரசியல் துறையிலும், உத்தியோகம் முதலிய பதவித் துறைகளிலும் தனியாகவும், ஆலயப் பிரவேசம் முதலிய ஏனையவற்றிற்குமட்டும் ஒற்றுமையாகவும் இருத்தல் வேண்டுமென்று ஆதிதிராவிட சமூகத்தினர் கருதும் வரை, பூரண ஒற்றுமையாவது முன்னேற்றமாவது சீர்திருத்தமாவது கிடைப்பது கூடாதாகுமென்றும், அரசியல், பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் படியும் இக்கேள்விகட்கு சமயத்துறையில் மட்டும் நின்று விடை கூறுதல் ஒருவருக்கும் திருப்திகரமாகாதென்றும் காரியதரிசி கூறினர்.

பிறகு தலைவரவர்கள் காலஞ் சென்ற திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டுகளை விரித்துக் கூறிப் பிரிவாற்றுமைத் தீர்மானத்தைப் பிரேரித்தனர். இத்தீர்மானத்தை அவையினர் ஒரு நிமிஷம் வரை எழுந்து நின்று மௌனத்தியானஞ்செய்து



நிறைவேற்றினர். பின்னர் தலைவரவர்கள் " கிழக்கும் மேற்கும் " என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். பிறகு திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் "திருச்சிற்றம்பலக் கோவை" என்பது பற்றியும் திரு. வி. உலகநாத முதலியாரவர்கள் " கடவுளும் சமயமும் " என்பது பற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பிறகு மாலைக்கடன் முடிக்க சபை கலைந்தது. மீண்டும் சபைகூடிய பின்னர் திருவாளர்கள் சாமி. வேலாயுதம்பிள்ளை, அ. மு. சரவண முதலியார், கெ. ஆறுமுகம் பிள்ளை ஆகிய இவர்கள் முறையே "மூவர்தமிழ்," "மொழியின் தோற்றமும் தமிழின் ஏற்றமும்," "எம் இருகண்மணிகள்" என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். பிறகு தலைவரவர்கள் தமது முடிபுரையைக் கூறினார்கள். பிறகு தூத்துக்குடி சபைக் காரியதரிசியாலும் சமாஜக் காரியதரிசியாலும் முறைப்படியும் வழக்கப்படியும் அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது. அரகர முழக்கத்துடன் சபை இனிது நிறைவேறிற்று.

மூன்றும் நாள் காலையிலும் மாலையிலும் தலைவரவர்கள் தூத்துக்குடி சபையைச் சேர்ந்த பல சைவ இளைஞர்களோடு அளவளாவி அவர்கட்குப் பணிசெயல் முறைகளையும் வேறு பல நுட்பங்களையும் அன்புடன் கூறினார்கள்.

## சைவ இளைஞர் மகாநாடு

இது திங்கட்கிழமை (28-22-31) காலை திரு. T. S. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு M. A. பெரும்படையான் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., பல அரிய கருத்துக்களடங்கிய தமது வரவேற்புப் பேருரையை நிகழ்த்தினர். பின்னர் தலைவர் பேருரை இளைஞர் பணிசெயல் முறைகளை வகுத்தும் தொகுத்தும் கூறிற்று. (இது அடுத்த இதழில் வெளிவரும்) பிறகு திருவாளர் ரா. பதுமநாபப்பிள்ளை, S. முத்துசாமிப்பிள்ளை ஆகியவர்கள் முறையே, "இளைஞரும் சமயவாழ்க்கையும்:" "சைவ இளைஞர் கடமை" என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். தலைவர் முடிபுரையுடன் இம்மகாநாடு இனிது நிறைவெய்தியது.

## சைவ மங்கையர் மகாநாடு

(திருமதி - பர்வதத்தம்மாள் எழுதியது)

1107 மார்கழி 14-ம் நாள் (29-12-31)செவ்வாய்க்கிழமை மாலை 3-மணிக்குத் தூத்துக்குடி சி. வ. அவர்கள் பாடசாலை மேடையில் பல்லாவரம், பொது நிலைக்கழக ஆசிரியர் திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் புதல்வியார் பாளையங்கோட்டை சைவத்திரு. திருவரங்க நீலாம்பிகையம்மையார் அவர்கள் தலைமையில் சைவ மங்கையர் பொதுக்கூட்டம் கூடியது. அதுகாலை திருநெல்வேலி, சிந்துபூந்துறை குலசேகரப் பட்டினம் முதலிய வெளியூர்ப் பெண்மணிகள் சிலரும் உள்ளூர்ப் பெண்மணிகள் பலருமாக சுமார் 300 பெண்மணிகள் கூடியிருந்தார்கள். மாலை 3-மணிக்கு மா. இ. பெண்பாடசாலை மாணவிகள் தமிழ் மறை ஓதி அவை தொடங்கப் பெற்

கூட்டத்திலிருந்தவர்கள், கோயில் பொதுவான இடம் என்றும், அதில் இதற்குமுன் பல கூட்டங்கள் நடந்திருக்கிறதென்றும், ஆகலால் மறையவர்களைச் சொற்பொழிவை மேற்கொண்டு நடத்துமாறு அன்புடன் கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க அவரும் தொடர்ந்து பேசுவாராயினர். சிறிது நேரத்திற்கெல்லாம் கூட்டம் நடக்குமிடத்தில் காரணமில்லாமலே, மேளவாத்தியம் வாசிக்கப்படவே, மறையவர்கள் தமது பேச்சை நிறுத்தக் கூட்டம் கலைந்தது. உடனே இருபோலீசார் மறையவரிடம் பேசி உண்மை தெரிந்து, இந்த நல்ல காரியத்தைத் தம்பிரான் ஏன் தடுக்கவேண்டும் என்று சொல்லிப் போயினர். இதுபற்றி ஊரில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

மறைமலையடிகளாரின் கொள்கைகளில் மாறுபாடுடைய பண்டிதர் ஸ்ரீ சமாஜத்தொண்டரும், சைவத்தொண்டை இடைவிடாதுசெய்து வருபவரும், மணிவாசகப் பெருமான் திருவடிகட்கு மெய்யன்பரும் ஆகிய மறையவர்களை, அடிகளாரின் புதல்வர் என்ற காரணத்தால், அவரது சொற்பொருளை நடக்கவொட்டாதபடி செய்வித்தது நேர்மையாகாது.

[குறிப்பு :—ஸ்ரீலஸ்ரீ பண்டிதர் அவர்கள் செயல் மிகப் பெரிதும் வருந்தத்தக்க தொன்றாம். கருத்து வேறுபாட்டினால் உண்மைப்பணி செய்வோரை அளவு கடந்து இகழ்வது பொது நீதிக்கும் சைவத்திறத்துக்கும விரோதம்.—பத்திராசிரியர்.]

## தூத்துக்குடி திருக்கோயில் வழிபாட்டுக் கழகத்தின் முதன்முறை

(3-1-32) "திருக்கோயில் வழிபாடு" இறைவன் திருவருளால் ஞாயிறன்று செவ்வனே நடந்தேறியது. அன்று இரவு ஏழரை மணிக்கு, சிவன்கோவில் முன்கொட்டகையில் அன்பர்கள் கூடி, "திருவெழு கூற்றிருக்கைத்" திருவகவலும், பின் "சிவபுராண" அகவலும், ஒருவர் முற்கூறப் பிறரெல்லாம் பிற்கூறவுமாக, முறையோடு சொல்லி முடித்துக் கோவிலுள் சென்று, இறையருள் பெற்று மீண்டோம். அன்று வந்திருந்தவர்களின் பெயர்கள் கீழே குறித்திருக்கிறேன். ஞாயிற்றுக்கிழமை 3-1-32-ல் திருக்கோயில் வழிபாட்டிற்கு 27 அன்பர்கள் அன்போடு முனைந்துவந்தார்கள். அவர்கள் பெயர் வருமாறு:-

1. சி. வ. க. சின்னக்கண்ணுப் பிள்ளை அவர்கள், B. A., B. L., 2. மு. சாம்பசிவன் பிள்ளை அவர்கள், (கோயில் அறநிலையாளர்), 3. கு. லெ. க. கந்தசாமி பிள்ளை அவர்கள் மிராசுதார் & வியாபாரி, 4. இ. வெண்ணிமாலைப் பிள்ளை அவர்கள், B. A., B. L., 5. ச. முத்துக்குமாரசாமி பிள்ளை (அடியேன்), 6. இரத்தினவேலு முதலியார் அவர்கள், (தந்தியாபீசு), 7. சுப்பய்யா பிள்ளை அவர்கள், (தேவாரப் பணியார்), 8. சி. த. சேதுராமலிங்கம் பிள்ளை அவர்கள், வியாபாரி, 9. சி. த. சிதம்பரத் தாண்டவமூர்த்தியா பிள்ளை அவர்கள், வியாபாரி, 10. A. பெரும்படையான் பிள்ளை அவர்கள், B.A., B.L., 11. அ. மு. ம. முத்துராமலிங்கம்பிள்ளை அவர்கள், வியாபாரி, 12. ச.ராம. சிதம்பரம்பிள்ளை அவர்கள், வியாபாரி, 13. ஆ. ராம. இராமலிங்கம் பிள்ளை அவர்கள், வியாபாரி, 14. A. R. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், வியாபாரி, 15. S. D. K. இலிங்கம் பிள்ளை அவர்கள், (இன்சுயரன்ஸ் ஏஜண்டு), 16. அ. முத்துக்குமாரசாமிப் பிள்ளை அவர்கள், 17. வி. ச. கிருஷ்ண பிள்ளை அவர்கள், 18. தி. லெ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், 19. ஸ்ரீரெங்கம் பிள்ளை அவர்கள், 20. கோமதிநாயகம் பிள்ளை அவர்கள், 21. ஆவுடைநாயகம் பிள்ளை அவர்கள், 22. அ. இளையபெருமாள் பிள்ளை அவர்கள், வியாபாரி, 23. சி. சோமநாத பிள்ளை அவர்கள், 24. சி. சந்திரசேகரம் பிள்ளை அவர்கள், 25. சோ. சிவசூரியன் பிள்ளை அவர்கள், 26. சு. சங்கரபாகம் பிள்ளை அவர்கள், 27. மு. முத்தனைந்தபெருமாள் பிள்ளை, (தக்ஷிணாமூர்த்தி).

தங்கள்,

# மதுரையில் சைவப் பிரசங்கங்கள்

[ஜே. என். இராமநாதன்]

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தாறுவது ஆண்டுவிழா, தூத்துக்குடி சைவ சிந்தாந்த சபையின் ஆண்டுவிழாவுடன் தூத்துக்குடியில் நடந்தது நேயர்களுக்குத் தெரியும். அவ்விழாவிற்குச் சென்றிருந்த பல அறிவாளர்கள், திரும்புகையில் மதுரையில் தங்கி, வியாழக்கிழமை 31-12-31-லும், வெள்ளிக்கிழமை 1-1-32-லும் திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் அறிஞர் மறைத்திரு தமிழ் வித்துவான் மதுரம் சுந்தரபாண்டிய ஓதுவார் அவர்களின் தலைமையில் அருமையான சொற்பெருக்குகள் நிகழ்த்தினார்கள்.

முதல்நாள், சித்தூர் கல்லூரித் தலைமையாசிரியர் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T., M. E. S. "சைவத்தின் முக்கியாம்சங்கள்" என்பதைப்பற்றிப் பேசினார். சைவத்தில், கடவுள், ஆன்மா, உலகம் என்ற முப்பொருள்கள், முக்காலத்திலும் ஆதிஅந்தமில்லாமல் உள்ளனவாககொள்ளப்படுகிறதென்றும், ஒரு ஆன்மா ஈடேறுவதற்கு ஒரு மதமும், மதாசாரங்களும், கோவில், மடம் முதலிய மதஸ்தாபனங்களும் அவசியமென்றும், எக்காலத்திலும், எவ்விடத்திலும் உள்ள ஒருவன், உண்மையை நாடி ஈடேற முயல்கிறானோ அவனே சைவன் என்றும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார். சைவத்தில் ஜாதி வித்தியாசமில்லை யென்றும் விளம்பினார்.

அதன் பின்னர் குடவாசல் போர்டு உயர்தர பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் திரு. டி. எஸ். வேலாயுதம், B. A., L. T. அவர்கள் "அப்பர் அருந்தமிழ்" என்றதாகப் பேசினார். திருநாவுக்கரசு என்ற பெயர் கடவுளால் கொடுக்கப்பெற்றதற்கேற்ப அப்பர் தம்முரிமை குன்றாதவராயும், அடக்கமுடையவராயும், பணிசெய்து கிடப்பதே தங் கடமையாக் கொண்டவராயும் இருந்த பெருமையை நன்குவிளக்கினார். ஆலயந்தொழுவதும், தேவாரப் பதிகங்கள் ஓதுவதும் ஆன்மாஉச்சீவிப்பதற்குத்தக்க சாதனமென்றும் கூறினார். அப்பர்சுவாமிகளை வைதீகப் பிராமணராகிய அப்பூதி அடிகள் மனனஞ்செய்து முத்திநிலை பெற்றாரென்றால், அப்பர் பெருமை விளம்புந் தன்மைத்தாமோ என்று கூறினார்.

பிறகு குழுமியிருந்தாருள் சிலர் சிலமொழிகள் கூற, தலைவர் முடிவுரையுடன் இரவு 10-மணிக்குக் கூட்டங் கலைந்தது.

மறுநாள், மாலை 6-மணிக்கே மக்கள் பெருந்திரளாகக் கலியாண மண்டபத்தில் கூடிவிட்டார்கள். திரிசிரபுரம் பிஷப்ஹீபர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திரு. என். எம். வேங்கடசாமி நாட்டார் அவர்கள் "திருஞான சம்பந்தர்" பெருமையைப்பற்றி மிக்க அழகாக யாவருள்ளத்திலும் பதியும்படி பேசினார். சம்பந்தர் கடவுளைத் தம்முடைய தாய் தந்தையராகவே அகத்திலும் புறத்திலும் கண்டு அனுபவித்தாரென்றும், அவர் சமண மதத்தைப் போக்கி, சைவ மதத்தை நிலை நாட்டுவதற்கே தோன்றியவரென்றும், சம்பந்தர் யாது செய்யினும், முதலில் சிவபெருமானின் உத்தரவைப் பெற்றே செய்துவந்தாரென்றும், தாழ்ந்த வகுப்பெனும் திருநீலகண்டயாழ்ப்பாணரைத் தமக்கு உடன் தோழராகக் கொண்டவரென்றும், தமிழ்க் கவியில் சிறந்தவரென்றும், அன்னாரின் வாழ்க்கை வரலாறு அன்னாரின்

தேவாரப் பதிகங்களிலேயே காணக்கிடக்கின்றன வென்றும், சேக்கிழார் பெரியபுராணம் உண்மையான ஆராய்ச்சியின்பேரில் ஆக்கப்பட்ட சரித்திர மென்றும் கூறினர். இறுதியில் சமணர்கள் கழுவேறிய தீச்செயலுக்குச் சம்பந்தர் தொடர்புடையரா என்றதற்கு, சேக்கிழார் பெரியபுராணத்தி லாவது, தேவாரப் பதிகங்களிலாவது, சமணர்கள் கழுவேறியதற்கு எவ்வித அகச்சான்றுங்கிடைக்கவில்லை யென்றும், மீண்டும் மீண்டும் தோல்வி யுற்றமையால்சமணர்கள் தற்கொலையாகவும் பிடிவாதத்தினாலும், வெட்கத்தி னாலும் தாங்களே சொன்னபடி நிறைவேற்ற வேண்டியிருத்தலினாலும் கழு வேறினர்களென்றும் எல்லாருங் களிக்கக்கூறினர்.

பிறகு, லால்குடி தமிழ்ப்பண்டிதர் திரு. ஏ. எம். சரவண முதலியார் அவர்கள் "நம்பி ஆரூரர்" அருமைகளைப் பற்றிக் கேட்போர் யாவரும் ஆனந்த பரவசமடையும்படி சொன்மாரி பொழிந்தார். அப்பர், சம்பந்தர் முதலிய பெரியார்களைப் பின்பற்றியே சுந்தரர் நடந்தாரென்று அம்மூவர் தேவாரப் பதிகங்களினின்று எடுத்துக் காட்டினர். சுந்தரர் கடவுளோடு தோழமை பூண்டு வழிபட்டு வந்த அருட்செயல்களைப் பாராட்டிப்பேசினர்.

வடமொழி வல்லுனரும், அர்ச்சகருமான மறைத்திரு. கலியாண சுந்தரபட்டரவர்களும், அமெரிக்கன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் திரு. கார் மேகக்கோன் அவர்களும், திரு. ஜே. என். இராமநாதன் அவர்களும் சைவ சமயாசாரியர்களைப்பற்றிப் பேசினர்கள். இரவு 10-30 மணிக்கு வந்தனத் துடன் பூமாலைகள் சூட்டப்பெற்றுக் கூட்டங்கலைந்தது. கூட்டத்தின் இடை யிடையே மதுரை, தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. தண்டபாணி தேசிகரும் அவருள்ளிட்டாரும் தேவாரப் பதிகங்கள் பாடி மனங்களிப் புறச் செய்தார்கள்.

இவ்வித சைவப் பிரசங்கங்கள் இதுவரை யாருங் கேட்டதில்லையென எல்லாருங் கொண்டாடினர்கள். இப்பிரசங்கங்களுக்கு முயற்சி யெடுத்துக் கொண்ட திருவாளர்கள். இ. மா. கோபால கிருஷ்ண கோனர், டாக்டர் சுப்ரமணிய ஐயர், அழகர் கோயில் சூபரின்டென்டெண்டு ஜே. எம். சோம சுந்தரம், B. A., B. L. முதலியவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருப்பதுடன், சைவ சித்தாந்த மகா சமாஜக் காரியதரிசி, சென்னை அட்வகேட் திரு. ம. பாலசுப்ரமணிய முதலியார், B. A., B. L. அவர்கள் இப்பிரசங்கங்கள் நடக்க முயற்சி யெடுத்துக் கூட்டுவித்ததற்கும் நன்றி பாராட்ட வேண்டிய தவசியமே.

ஈண்டு ஒன்று குறிப்பிடவேண்டியிருக்கிறது. மேற்கண்ட சைவப் பிரசங்கங்கள் திருக்கல்யாண மண்டபத்தில் 31-12-31 முதல் நடத்த அநுமதிக்கோரி கோயில் டிரஸ்டியவர்களைக் கடிதவாயிலாக 28-12-31 லேயே கேட்டதற்கு, உத்தரவுகொடுக்க மறுக்கப்பட்டு, பின்னர் கமிட்டி அங்கத்தவர்கள் முயற்சியால் 31-12-31 மாலை 5-மணிக்கு உத்தரவு கொடுக் கப்பட்டதைப்பற்றி வருத்தப்படுவதா அல்லது மகிழ்ச்சி யடைவதா வென்று விளங்கமாலிருக்கிறது.

சமய உண்மைகளைப் பரப்புதற்கு ஒரு சபை ஏற்படுத்த வேண்டு மென்று இவ்வூர் பெரியார்கள் கருதி வருகின்றார்கள். கூடிய விரைவில் அவ் வித சபை ஒன்று நிலைநாட்டப்படுமெனத் தெரியவருகிறது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

"எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு."

சைவ சித்தாந்த மகா சமாஜம்

# 26-ம் ஆண்டு அறிக்கைப் பத்திரம்

### சமாஜம் நிறுவப்பெற்ற காலம்

இச்சமாஜம் சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் ஞானத்தையும் எவருக்கும் எளிதில் விளக்கும்பொருட்டு 1905ஆம் ஜூலைமாதம் 7-ந் தேதி நிறுவப்பெற்றது.

### இடம்

இச்சமாஜத்தின் காரியாலயம் தற்சமயம் சென்னைக் கோவிந்தப்ப நாய்க்கன் தெரு வில் 150-வது எண்ணுள்ள இல்லத்தில் நிலை பெற்றிருக்கின்றது.

### உறுப்பினர் தொகுதி

சமாஜத்தின் உறுப்பினர் ஐவகைப்படுவர். அவர்கள் போஷகர், ஆயுள் அங்கத்தி னர், கௌரவ அங்கத்தினர், சாதாரண அங்கத்தினர், மங்கையர் தொகுதியினர் என்பவ ராவார்கள். அவர்களில்,

| | | |
|---|---|---|
| இவ்வாண்டு முதலில் இருந்தவர்கள் | ... | ... 696 |
| ,, முடிவிலிருப்பவர்கள் ... | ... | ... 593 |

### இணைக்கப்பட்ட சைவ சபைகள்

இவ்வாண்டில் கீழே குறிக்கப்பட்ட 12 சபைகள் சமாஜத்தோடு இணைக்கப்பட்டன.

1. தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், திருநெல்வேலி.
2. சைவ சித்தாந்த சபை, தஞ்சாவூர்.
3. சைவ சித்தாந்த சபை, திரிசிராப்பள்ளி.
4. சைவ சித்தாந்த சபை. கூவம்.
5. ஸ்ரீ பிரசன்ன விநாயக சரவணபவானந்த சபை, திருவல்லிக்கேணி.
6. ஸ்ரீ சண்முக சன்மார்க்க சபை. (திருநீலகண்டபுரம்) இராயப்பேட்டை.
7. ஸ்ரீ சத்வித்யா சன்மார்க்க சங்கம், பேரூர்.
8. சிவனடியார் திருக்கூட்டம், ஆலந்தூர்.
9. தேவார சபை, அவளூர்ப்பேட்டை.
10. பிள்ளையார் நன்னெறிக்கழகம், மருதவரைகீழல்.
11. திருஞானசம்பந்தர் திருச்சபை, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
12. சமரச வேத சன்மார்க்க சங்கம், அரசூர், பெங்களூர்.

சென்ற ஆண்டில் ஐந்து சபைகளே இணைக்கப்பெற்றன. இவ்வாண்டில் பன்னி ரண்டு சபைகள் இணைக்கப்பெற்றுள்ளமை, சமய வளர்ச்சியைக்குறிக்கும் அறிகுறிகளுள் ஒன்றாகும். நமது நாட்டிலுள்ள நூற்றுக்கணக்கான சபைகளும் தாய்ச்சபையாகிய சமா ஜத்தோடு இணைந்துழைக்க முன்வந்தால் மிக்க நலமாயிருக்கும்.

### காரிய நிர்வாக சபை

இவ்வாண்டில் நிர்வாக சபைக் கூட்டங்கள் 7 நடைபெற்றன.

### வெளியூர் ஆலோசனை சபை

இச்சபையினர் உதவியும் ஆலோசனையும் கிடைத்தவரை உபயோகித்துக் கொள் ளப்பட்டன. வருகிற ஆண்டிலேனும் இச்சபையினர் அதிதீவிரமாக உதவி புரிவார்க ளென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

### வரவு செலவுக் கணக்கு

26-ம் ஆண்டு வரவு செலவு கணக்கு 1930-ம்வருடம் டிசம்பர்மீ 1உ முதல் 1931-ம் வருடம் நவம்பர்மீ 30உ வரை நடந்த நடவடிக்கைகளின் குறிப்புக்களாகும். இவைகளைச் சரிவர வைத்துவந்த திருவாளர் தி. சு. சுந்தரம் பிள்ளை அவர்கட்கும் மாதாமாதம் கணக்குகளை நன்கு பரிசோதித்துத் தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்து வந்த

கணக்காளர் திரு. க. இரத்தின முதலியாரவர்கட்கும், வருடக் கணக்கைப் பரிசோதித்துதவிய திரு. வே. மாணிக்க முதலியாரவர்கட்கும் சமாஜத்தின் நன்றி உரித்தாகும். இவ்வருடத்திய வரவு செலவுக் கணக்குக் குறிப்பைக் கூட்டிதழில் காண்க.

## பொருள் வலிவு

இச்சமாஜத்தின் பொருள் வலிவு ரூ. 594—11—4. இதன் விவரம் :—

| | | | | |
|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணயச் சங்கத்தில் டிபாசிட்டு ... | ரூ. | 574 | 11 | 4 |
| கையிருப்பு ... ... ... ... | ,, | 20 | 0 | 0 |
| ஆகமொத்தம் | | 594 | 11 | 4 |

## பொதுக் கூட்டங்கள்

இவ்வாண்டில் ஆண்டு விழா வொன்றும் நாற்பத்திரண்டு பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. அவற்றுள் இரண்டு, சமாஜத்தின் வேலையைப்பற்றியன. ஏனைய நாற்பதும் சமயப் பிரசாரம் செய்வதற்காகவே கூட்டப்பட்டன. இவைகளுள் ஒன்று திருவொற்றியூரிலும், ஒன்று வடலூரிலும், ஒன்று ஆச்சாபுரத்திலும், இரண்டு திருக்கொள்ளம்பூதூரிலும், ஆறு பெங்களூரிலும், ஒன்று திருநாவலூரிலும், இரண்டு செங்கற்பட்டு ஜில்லாவிலும், மூன்று சோழநாட்டிலும், ஏனைய சென்னைமா நகரிலும் நடைபெற்றன. சென்னையில் நடந்த கூட்டங்களுள் பன்னிரண்டு திருவாசக நுண்மைபயில்வதற்காகக் கூட்டப்பட்டன. இவைகளின் நடைமுறை விவரங்களெல்லாம் அவ்வப்போது "சித்தாந்தத்தில்" வெளியிடப்பட்டன.

## திருவாசகம் நுண்மை பயில்கழகம்

இது சென்னை இந்து அறநிலயப் பாதுகாப்பாளர் சைவத் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டது. திருவாசகத்தில் சில பாசுரங்களிலுள்ள அருமை பெருமைகளெல்லாம் மேல் நாட்டு ஆராய்ச்சி முறையில் விளக்கப்பட்டன. இக்கழகக் கூட்டங்கள் பன்னிரண்டில் சில சிந்தாதிரிப்பேட்டை உயர்தர பாடசாலையில் திரு. டி. பி. மீநாக்ஷி சுந்தரம் பிள்ளை, M. A., B. L. அவர்களைக் கொண்டு நடைபெற்றன. ஷை பாடசாலை அதிகாரிகட்கும், பிள்ளையவர்கட்கும், முதலியார் அவர்கட்கும் சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்தாகும்.

## சமாஜ சொற்பொழிவாளர்

இவ்வாண்டில் பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் பணி செய்வதற்காக திரு. E. S. கண்ணபிரான் வேள் என்பார் சமாஜச் சொற்பொழிவாளராகவும் பத்திரிகைக்குச் சந்தா சேர்த்து புத்தக விற்பனை செய்து உபகரிக்கும் தொண்டராகவும் ஊழியத்திற்குச் சான்றளிக்கும் முறையில் நியமிக்கப்பட்டார். மூன்றாவது மாத யிறுதியில் இவர் பிரசாரம், தொண்டு முதலியவற்றைக் கவனித்து நிர்வாகசபையினர் இவரது பணியை நிறுத்திவிட்டனர். இவர் சந்தா வசூல், புத்தக விற்பனை முதலியவைகளில் சமாஜத்துக்கு ஏறக்குறைய ஐம்பது முதல் நூறு ரூபா வரை செலுத்தவேண்டியிருக்கிறது. இவரைப்பற்றிப் போலீசில் பிராது கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீசாரும் பிராதைக் கிரிமினல் கேசாகப் பதிவு செய்து கொண்டு இவரைக் கண்டுபிடிக்க முயற்சித்து வருகிறார்கள். இவருடைய நடவடிக்கைகள் மிகவும் வருந்தத் தக்கன. இவரை அறிந்தவர்கள் எவரேனும் இவர் செலுத்தவேண்டிய தொகைகளை இவர் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்து உபகாரம் புரிதல் சமாஜத்துக்குச் செய்யும் திருப்பணிகளுள் தலையாயதாகும். அவர்க்குச் சமாஜத்தார் நன்றியுமுரித்தாகும்.

## "சித்தாந்தம்" பத்திரிகை

இது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதன் பத்திராசிரியருக்கும், உதவிப் பத்திராசிரியராயிருந்து அச்சுத் தாள்களைப் பரிசோதித்து உபகரித்த திரு. வி. உலகநாத முதலியாரவர்கட்கும் கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்கட்கும் பத்திரிகையைச் செவ்வனே அழகுடன் உரிய பொழுதில் வெளிவரச் செய்து தந்த சாது அச்சுக்கூடத்திற்கும் சமாஜத்தினர் என்றும் நன்றி பாராட்டுகின்றனர்.

## தேவார வெளியீடு

தேவாரத் திருமுறைகளைப் பல்லாயிரக் கணக்காக அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற அவா நம் சமாஜத்தினருள் நெடுநாளாகக் குடிகொண்டிருந்தது. 1929, 1930-ஆம் ஆண்டுகளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரமும் அப்பர் சுவாமிகள் தேவாரமும்



வெளிவந்ததுபோல் இவ்வாண்டு திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 3000 பிரதிகள் வெளியிடப்பட்டன. இவ்வெளியீட்டுக்காக வேண்டிய பொருளை முன்பணமாக உதவிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கட்கும் அச்சுத்தாள்களைப் பரிசோதித்தும் வேறு பல வழிகளில் பணிசெய்தும் உபகரித்த திருவாளர்கள் கி. குப்புசாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், பாலி சு. நெல்லையப்பர், அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கட்கும் இப்புத்தகங்களை மிக விரைவில் நூற்றுக்கணக்காக வாங்கி உபகரித்த தமிழ்நாட்டுச் சைவ மக்களுக்கும் நம் சமாஜத்தினரின் மறவா நன்றி என்றும் உரியதாகும்.

## நன்றிகூறல்

வடலூர், கொள்ளம்பூதூர், பெங்களூர், நாவலூர் முதலிய இடங்களில் சமாஜக் கூட்டங்களை மிகச் செவ்வனே நடைபெறச் செய்த தமிழ்நாட்டுச் சைவ சபைப் பிரதிநிதிகட்கும், காரியதரிசி, உதவிக் காரியதரிசி, கணித பரிசோதகர் முதலிய சமாஜ நிர்வாக சபையினருக்கும் பலவகையிலும் வேண்டியபோதெல்லாம் தம்மால் இயன்றவரை உழைத்துப் பேருபகாரம் செய்த பொருட்காப்பாளர் திரு. தி. க. சுந்தரம்பிள்ளை அவர்கட்கும் சமாஜத்தினர் பெரிதும் நன்றி செலுத்துகின்றனர்.

## தலயாத்திரைப் படம்

சிவஸ்தல விஷ்ணுஸ்தல சுப்பிரமணிய ஸ்தலங்களைக் காணவிரும்புவோர் யாத்திரை செய்வதற்கு அநுகூலமாகத் தலயாத்திரைப் படமும் விளக்கமும் திரு. தி. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களால் தயாரிக்கப்பட்டன. இவைகளில் 3000 பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை தமிழ்நாட்டில் இத்தகைய படம் வெளிவரவில்லை.

## தேவாரப் பரிசுப் போட்டி, தலப்பட பரிசுப் போட்டி

மேல்நாட்டு நவீன விற்பனை முறைகளை யனுசரித்துத் தேவாரம் தலப்படம் வாங்குவோருக்குள் ஒரு பரிசுப்போட்டி ஏற்படுத்தப்பட்டது. தேவாரம் ஏல விற்பனை மொத்த விற்பனை செய்வது தங்கள் சமயப்பற்றின் குறைவை வெளிப்படுத்துவதென்றெண்ணி மனம் நொந்த சைவப்பற்றுடைய அன்பர்கள் இப்பரிசுக்காவது பரிந்து உபகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வேண்டுகோள்

பத்திரிகைக்கு நிறைய சந்தாதாரர்கள் தேவை ; அரிய பொருள்களைச் சுருக்கமாக எளிய நடையில் எழுதித் தருவோர் தேவை. சமாஜத்தினர் ஒவ்வொருவரும் உண்மையாக சமாஜ வளர்ச்சியைக் கருதினால் இதுமுதல் ஒரு மாதத்துக்குள் ஒரு புதிய சந்தாதாரரைச் சேர்த்துத் தருவதாக இறைவன் திருமுன்பு உறுதி செய்துகொண்டு அவ்வாறே செய்யவேண்டும். திருமுறை வெளியீடுகள் மேன்மேலும் அடக்கவிலையில் அச்சு விமானமேறி வெளி வரவேண்டுமானால் சமாஜத்திலுள்ள புத்தகங்களை விரைவில் விற்று முதல் செய்வதற்கு உபகரிக்கவேண்டும். திருவாசகத்தை உரையுடன் வெளியிட சமாஜம் தீர்மானித்துள்ளது. ஒன்பதாம் திருமுறையும் இன்னம் நான்கு மாதங்களுக்குள் வெளிவருதல் கூடும். திருமந்திரத்தை நல்ல உரையுடன் வெளியிடவும் பதினோராந் திருமுறையை மூலமாகவும், பெரிய புராணத்தைக் குறிப்புரையோடும் பதினான்கு சாத்திரங்களைப் பதவுரையோடும் விரைவில் வெளியிட வேண்டுமென்ற நோக்கம் சமாஜத்துக்குண்டு. மேன்மேலும் இச்சமாஜத்தின் அரிய நோக்கங்களை ஈடேற்றுவதற்கும், சமய முன்னேற்றத்திற்குரிய சமய சீர்திருத்தம், ஆலய சீர்திருத்தம், மட சீர்திருத்தம் முதலியவைகளுக்காகச் செவ்வனே உழைத்தற்கும், பத்திரிகை மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கும், ஆயிரக்கணக்கான வகையில் தேவாரத் திருமுறைகளைத் தமிழ் நாடெங்கும் பரப்புவதற்கும், சைவ சமயத்தைப் பற்றிய பல நவீன அபிப்பிராயங்களை ஆராய்ந்து உண்மைச் சைவ சமயத்தை உலகெங்கும் பரப்புவதற்கும், பிரசாரகர்களை ஏற்படுத்திப் பணி செய்வதற்கும், சைவாபிமானிகள் ஆயிரக்கணக்காக முன்வந்து பெரும்பொருள் திரட்டிச் சமாஜத்திற்கு உதவி, இச் சமாஜத்தினரை ஊக்குவித்து, சைவ சித்தாந்த சமயத்தை உலகெங்கும் உண்மையில் மிளிரச் செய்யுந் திருப்பணியில் அன்பர்கள் ஈடுபடுவார்களென முழுமுதற் கடவுள் திருவடிகளை வழுத்துகின்றோம்.

" ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண், பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய, கோதில் சைவக் குலமிக வாழியே "

இங்ஙனம் : உத்தரவின்படி,

**பாலசுப்ரஹ்மண்யம்,** காரியதரிசி,

187/62

## சைவசித்தாந்த மகா சமாஜம், சென்னை

### இருபத்தாரும் ஆண்டு வரவு செலவு கணக்குத் தொகுப்பேடு

(1—12—1930 முதல் 30—11—1931 வரை)

**வரவு**

| வரவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | 40 | 0 | 0 |
| சாதாரண அங்கத்தினர் சந்தா | 792 | 12 | 0 |
| இணைத்தல் சந்தா | 33 | 0 | 0 |
| பழைய பிரதிகள் விற்பனை | 15 | 14 | 6 |
| நன்கொடை | 25 | 0 | 0 |
| தேவார விற்பனை | 1859 | 11 | 9 |
| தலயாத்திரைப்படம் விளக்கம் விற்பனை | 12 | 4 | 0 |
| தபால் வகை | 65 | 0 | 6 |
| சில்லரை வகை | 8 | 4 | 6 |
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் | 826 | 8 | 0 |
| தபாலாபீசு சேவிங்ஸ் பாங்கி | 25 | 13 | 5 |
| வட்டி | 47 | 15 | 5 |
| | 3752 | 1 | 1 |
| ஆரம்ப இருப்பு | 9 | 11 | 0 |
| | 3761 | 12 | 1 |
| பொருள் வலிவு | | | |
| வேளாள ஐக்கிய நாணயச் சங்கத்தில் டிபாசிட்டு | 574 | 11 | 4 |
| கையிருப்பு | 20 | 0 | 0 |
| | 594 | 11 | 4 |

**செலவு**

| செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| "சித்தாந்தம்" அச்சுக்கூலி காகிதம் உட்பட | 629 | 2 | 6 |
| தேவார வெளியீடு | 2117 | 4 | 6 |
| தலயாத்திரைப்படம் விளக்கம் | 140 | 11 | 3 |
| மற்ற வெளியீடுகள் | 4 | 8 | 0 |
| தபால் வகை | 286 | 1 | 0 |
| சில்லரை வகை | 49 | 9 | 3 |
| புத்தகம் பேனா பாரங்கள் முதலியன | 56 | 1 | 0 |
| பொதுக் கூட்டங்கள் | 70 | 14 | 0 |
| வேளாள ஐக்கிய நாணயச் சங்கம் | 345 | 14 | 7 |
| அலமாரி முதலியன | 41 | 10 | 0 |
| | 3741 | 12 | 1 |
| முடிவு இருப்பு | 20 | 0 | 0 |
| | 3761 | 12 | 1 |

ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி.
தி. க. சுந்தரம்பிள்ளை, பொருட்காப்பாளர்.
க. இரத்தின முதலியார், மாதக்கணித பரிசோதகர்.
வே. மாணிக்க முதலியார், ஆண்டுக்கணித பரிசோதகர்.

16—12—1931.

### பத்திராசிரியக் கழகம்-பணியாளர் கழகம்

1. மு. கதிரேசச் செட்டியார், மகிபாலன் பட்டி.
2. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, திருநெல்வேலி.
3. ச. சச்சிதானந்தம் பிள்ளை, சித்தூர்.
4. த.வே.உமாமகேசுவரம்பிள்ளை, தஞ்சை.
5. க. மு. வேங்கடசாமி நாட்டார், திரிச்சி.
6. கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர்கோயில்.
7. அ. சோமசுந்தரம் செட்டியார், சென்னை.
8. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், சென்னை, பத்திராசிரியர்.
9. திரு. வி. உலகநாத முதலியார், சென்னை, உதவிப் பத்திராசிரியர்.

### ஆராய்ச்சிக் கழகம்

1. மு. கதிரேசச் செட்டியார்.
2. கா. சுப்பிரமணியம் பிள்ளை.
3. க. மு. வேங்கடசாமி நாட்டார்.
4. ம. சுவாமிநாத சிவாசாரியார்.
5. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

### வெளியூர் ஆலோசனை சபை

#### செங்கல்பட்டு

1. க. சபாபதி முதலியார், கட்டியாம்பந்தல்.
2. கா. வேதாசலமுதலியார், காவித்தண்டலம்.
3. வா. தி. மாசிலாமணி முதலியார், சேவூர்.

#### வட ஆர்க்காடு

1. W. வீரராகவ முதலியார், வாலாஜாபேட்டை.
2. நடேச செட்டியார், வேலூர்.
3. M.A. வேலாயுதமுதலியார், குடியாத்தம்.

#### தென் ஆர்க்காடு

1. தி. கு. தி. நாராயணசாமி நாயடு, கிழக்கு மருதூர்.
2. வை. கந்தசாமி முதலியார், திருப்பாதிரிப்புலியூர்.
3. சம். சின்னசாமி செட்டியார், திருவெண்ணெய் நல்லூர்.

#### தஞ்சாவூர்

1. த.வே.உமாமகேசுவரம்பிள்ளை, தஞ்சை.
2. க. குருசாமி பிள்ளை, கண்டியூர்.
3. வேலாயுதம் பிள்ளை, கொட்டையூர்.

#### திரிசிராப்பள்ளி

1. க. மு. வேங்கடசாமி நாட்டார்.
2. அ. மு. சரவண முதலியார், லால்குடி.
3. அமிர்தம் செட்டியார், பூவாளூர்.

#### இராமநாதபுரம்

1. ரா. கு. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.
2. வெ. கா. லக்ஷ்மணன் செட்டியார், கோட்டையூர்.
3. காசிநாதன் செட்டியார், கொத்தமங்கலம்.

#### திருநெல்வேலி

1. கா. சுப்பிரமணியம் பிள்ளை, திருநெல்வேலி.
2. அ. முத்தையபிள்ளை, பாளையங்கோட்டை.
3. ந. சிவகுருநாதன் பிள்ளை, தூத்துக்குடி.

#### கோயம்புத்தூர்

1. C. K. சுப்பிரமணிய முதலியார், கோயம்புத்தூர்.
2. C. M. இராமச்சந்திரன் செட்டியார்.
3. சாந்தி முதலியார், பொள்ளாச்சி.

#### திருவநந்தபுரம்

1. கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர்கோயில்.

#### பெங்களூர்

1. வி. சே. ஆறுமுக முதலியார், நால்வர் பவனம், பெங்களூர்.

#### புதுக்கோட்டை

1. வ. பழ. சா. சாமிநாதன் செட்டியார், மேலைச்சிவபுரி.
2. வ. ராம. இலக்குமணன் செட்டியார், M. L. C. வலம்புரி.

#### புதுச்சேரி

1. S. பழனிசாமிப் பிள்ளை, புதுவை.
2. S. P. அண்ணாமலை முதலியார், புதுவை.
3. சொக்கநாத சிவசங்கர செட்டியார், புதுவை.

#### மதுரை

1. J. M. சோமசுந்தரம் பிள்ளை, மதுரை.
2. R. S. பதி, மதுரை.
3. கரிமுத்து - தியாகராஜ செட்டியார், மானேஜர், மீனாக்ஷி மில், மதுரை.

#### சேலம்

1. அ. வரதநஞ்சைய பிள்ளை, தோரமங்கலம்.
2. A. மாணிக்க செட்டியார், செவ்வாய்ப்பேட்டை.
3. K. நடேச உடையார், தமிழ்ப்புலவர், காலேஜ், சேலம்.

#### நீலகிரி

1. சாம்பசிவம் பிள்ளை, பி. ஏ. எல். டி., உதகமண்டலம்.
2. * * *

#### சித்தூர்

1. T. N. உமாபதி ஐயர், சித்தூர்.
2, 3. * * *

குறிப்பு :— * * * என்ற குறியிட்ட காலியிடங்கட்குத் தகுதியுள்ள சைவ உழைப்பாளிகள் பெயர்களை நமக்கு அன்பர்கள் குறித்தனுப்புமாறு வேண்டுகிறோம்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 1.

## சாத்தூரில் சமயப்பணி

[உண்கேளித்தான்]

சாத்தூர் தமிழ்ச்சங்கத்தின் பதினேழாவதாண்டு நிறைவுவிழா சைவத்திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில் 1931ஆம் டிசம்பர்மீ 30, 31-ம் தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, கெ. ஆறுமுகம் பிள்ளை, ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய இவர்கள் முறையே "தமிழகத்தின் மாறுதல்கள்," "கம்பநாடன்கவிதை" "திருக்குறட்பெருமை," "அப்பரும் அவர் அருள்மொழியும்," "கா கா கா" என்பனபற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். வந்தனை, கடவுள் வாழ்த்து முதலியவற்றோடு விழா இனிது நிறைவேறிற்று.

---

கரந்தைத் தமிழ்ச்சங்கம்

### திரு. ப. வே. மாணிக்க நாயக்கரவர்கள் காலஞ்சென்றதுபற்றி

### ஓர் இரங்கற் கூட்டம்

1932ஆம் ஜனவரிமீ 3உ (பிரசோற்பத்தி, மார்கழி, கசஉ) ஞாயிறு மாலை 3-மணிக்கு திரு. T. P. K. அழகர்சாமி பிள்ளை அவர்கள் தலைமையில் இச்சங்கத்தே ஒரு பொதுக் கூட்டம் கூடியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

(1) திருநாயக்கரவர்கள் நல்லுயிர் எல்லாம் வல்ல இறைவன் தண்ணடி நீழலில் அமைதியுற்றிருக்க இச்சங்கம் இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது. (2) திரு. நாயக்கரவர்கள் குடும்பத்தினருக்கு இச்சங்கம் தன் மனமார்ந்த துயரினைக்கூறி, அவர்கள் ஆறுதல் குறித்து இறைவனடியை எண்ணி இறைஞ்சுகின்றது. (3) திரு நாயக்கரவர்கள் அரும்பெறல் ஆராய்ச்சிகளையெல்லாம் தமிழுலகம் அறிந்து பயனுறுமாறு செய்து நாயக்கரவர்கள் புகழுடம்பினை நிலைநாட்ட இச்சங்கம் எண்ணியிருப்பதால் அவர்தம் ஆராய்ச்சிக் குறிப்புக்களையெல்லாம் இச்சங்கத்திற்கு உதவியருளத் திரு. நாயக்கரவர்கள் குடும்பத்தினரை இச்சங்கம் வேண்டிக் கொள்ளுகின்றது.

---

### திரு. ம. பாலசுப்ரமணிய முதலியாரவர்கள், B. A., B. L.,

காரியதரிசி,

சைவ சித்தாந்த மகா சமாஜம், தூத்துக்குடி.

அன்புமிக்க ஐயா, நலம்!

யான் ஏற்றுக்கொண்ட சமாஜப்பணியைப் புரிதற்கு இன்று காலை ら-மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு ஆங்குவர முயன்றேன். ஒருவாரமாகப் பெய்த மிகுதியான மழையால் இவ்வூரிலிருந்து சர்விஸ்கார் நிலையமாகிய திருப்புத்தூர்க்கே வரவியலவில்லை. ஒரு பெரிய பாலாறு என்பது வெள்ளம் பெருக்கெடுத்து பல இடங்களில் ரோட்டுகளை உடைத்துக் கட்டைவண்டிகள் வரத் தடைப்படுத்திவிட்டது. கட்டை வண்டியிலேறி வேறு சில சுற்றுவழிகளால் வரமுயன்றும் எங்கும் வெள்ளமேகற்றித் தடைப்படுத்திவிட்டது. நீர்ப்பெருக்கில் வயல் வழியில் ஆள்மாத்திரம் வரக்கூடிய சௌகரியமிருந்தது. ஓர் ஆள் மூலம் திருப்புத்தூர்க்குத் தந்தியெழுதிக் கொடுத்து இன்று பிற்பகல் கிடைக்கும்படி அவரிடம் சைவப்பிரகாசம் பிரஸ்க்கு அனுப்பிவிட்டு இன்று மாலை இங்குத் திரும்பலானேன். என் செய்வல்! சைவத் திறத்தடைதற்குப் பல வழிகளில் உழன்றும் திருவருள் கூட்டுவித்திலது. சைவ சித்தாந்த சபைத் தலைவரவர்கட்கு இன்று விவரமாக மற்றொரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதனால் என் பிரயாண முயற்சி தெரியவரும். என்பருவுடம்பு இங்கிருப்பினும் நுண்ணுடம்பு சமாஜ விழாவிலேயேபற்றி நிற்கின்றது. என் அரிய நண்பர்களையெல்லாங் கண்டு இன்புறும் பேறு இம்முறை கிடைக்கப்பெறுமைபற்றி யளவிலாக் கவலை யெய்துகின்றேன்.

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் இடையே கரிப்பாய் நாயே னிருக்கலானேன். திருவருளியக்கப்படி நடந்துகொள்ள வேண்டுவது நம் கடமையாயிற்று. என் பெரும் பிழையைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்து அமைப்புகளின் பெருமையாற் பொறுத்தருள மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். வேறு தெரிவித்துக்கொள்ள வேண்டியது யாது? இந்நிகழ்ச்சிபற்றி என்னை வெறுது ஏற்றுக்கொள்ள மீண்டும் வேண்டுகின்றேன்.

சமாஜ விழா எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பாங்கால் இனிது நிறைவேற வேண்டுகிறேன்.

மகிபாலன்பட்டி,
`8.12-1931.

தங்களன்புள்ள,
மு. கதிரேசன்.

'nted by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali
vapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-
'e Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street,